11.07.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

கலம் - 01. சூரியன் -45 பக்கம்: 32 விலை: 20/=

## புத்தகயா குண்டுவெடிப்பு

### கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?

## சா(தீ)யில் மரணித்த காதல்




**"பௌத்த மதத்தைக் காப்பாற்றுங்கள்"**

புத்தகயா குண்டுவெடிப்பை கண்டித்து நேற்று கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு ஊர்வலத்தின் ஒரு காட்சி

# களவு போன விக்கிரகத்தை தேடினாலும் சிறையா?

## ஆலய நிர்வாகம் கேள்வி!

யுத்தம் நிறைவடைந்தாலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களும் காணாமல் போதல் சம்பவங்களும் குறைந்ததாகவில்லை. இத் திருட்டுச் சம்பவங்களால் தெய்வங்களுக்குக் கூட பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான ஒரு சம்பவமே அண்மையில் வவுனியா முருகனூரில் இடம்பெற்றது. முருகனூர் மக்களால் வழிபடப்படுகின்ற அவர்களது குல தெய்வமான முருகனூரில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேக விழா பல வருடங்களின் பின் கடந்த மாதம் இடம்பெற்றது. கும்பாபிஷேகம் இடம்பெற்று நான்கு நாட்களுக்குள் இவ் ஆலயத்தினுடைய விநாயகர் சிலையானது திருடப்பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பில் பல தெய்வ விக்கிரகங்கள் களவு போன நிலையில், முருகனூரில் இடம்பெற்ற இத் திருட்டுச் சம்பவமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

திருட்டுப் போன விக்கிரகத்தை கண்டுபிடிக்காத பொலிஸார் விக்கிரகம் தேடிய ஆலய பரிபாலன சபையினரை கைது செய்த சம்பவம் மேலும் மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்துடன் தொடர்புடைய கு.பெருமாள் என்பவர் கூறுகையில்,

எங்கட கிராம மக்கள் இந்த நிலையில வாழ்வதற்கு எங்கட இந்தத் தெய்வம் தான் துணை. நாம் கும்பாபிஷேகம் செய்து நாலு நாளுக்குள் கோயிலின் ஐம்பொன்சிலை களவு போயிட்டுது. பொலிசிலையும் என்ரி போட்டிருக்கு. இன்னும் ஒன்ரையும் காணோம் என்றார்.

கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற இவ் விக்கிரக திருட்டுச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசில் உடனடியாகவே ஆலய நிர்வாகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனாலும் விக்கிரகம் கிடைக்காமையால் சமய அனுட்டானங்களிலும் வழிபாட்டு முறைகளிலும் நம்பிக்கை கொண்ட மக்கள் வவுனியாவில் உள்ள சாமிமாரிடமும் சாஸ்திரிமாரிடமும் அலைந்து திரிந்தனர்.

இந்நிலையில், இறையருள் உள்ள பெண் ஒருவர் கலையாடி ஆலயத்தின் பின் பகுதியில் ஆலய விக்கிரகம் இருப்பதாகக் கூறியதால் ஆலய நிர்வாகமும் கலையாடிய பெண்ணின் குடும்பத்தினரும் ஆலய வளவுக்குள் சிலையை தேடும் பணியில் ஈடுபட்டனர்.



இவ்வாறு விக்கிரகம் தேடப்பட்டுக் கொண்டிருந்த போது அங்கு விரைந்து வந்த பொலிஸார் இவர்களை கைது செய்துள்ளனர்.

விக்கிரகம் தேடிக் கொண்டிருந்தவர்களை புதைபொருள் களவாடல் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.





இது தொடர்பாக ஆலய செயலாளர் ந.இரவீந்திரராசா கூறுகையில்,

பொலிசாருக்கு தெரியப்படுத்திட்டு தான் நாங்க ஆலய வளவில் எங்கட சமய நம்பிக்கைப்படி விக்கிரகத்தை தேடினம். ஆனா அங்க வந்த 119 பொலிஸ்காரர்கள் நாங்க சொன்ன எதையும் கேட்காமல் புதைபொருள் களவாடல் சட்டத்தின் கீழ் சாமியம்மா, சாமியம்மாவின் 1-1/2 வயசுக் குழந்தை, ஆலய தொண்டர்கள், பரிபாலன சபையினர் என எட்டுப் பேரைக் கைது செய்தனர் எனத் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்கள் விசாரணைக்காக மீண்டும் கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அடுத்த வழக்கு 21 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இக் கைது விடயம் தொடர்பாக பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர், சிவில் பாதுகாப்பு குழு, பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல தரப்பினரிடம் கூறிய போதும் இதுவரை எவரும் ஆலயத்தை வந்து பார்க்கவில்லை என ஆதங்கத்துடன் ஊர் மக்கள் கவலையை வெளிப்படுத்தினர்.

பொலிஸார் உசார் நிலையில் இருக்கத்தான் வேண்டும். அதற்காக தீர விசாரியாது மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் ஏற்படும் உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கும் அவர்களுக்கு ஏற்பட்ட களங்கத்திற்கும் யார் பதில் சொல்வார்கள்? என இவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

-கே.வாசு-

### பிரபலங்கள் என்ன எழுதுகிறார்கள்



நடிகர் விஜய் Best Wishes என எழுதி கையெழுத்தும் போடுவார். இவரின் அப்பா எஸ்.ஏ.சி. தமிழல் "நீங்காத நினைவுடன் என எழுதுவார், விக்ரம் ஆங்கிலத்தில் Do one's best. Do one's Duty, Do Won-ders என எழுதுவார். அஜித் Love always என்றும் ரஜினி God be with us என்றும் ஏ.ஆர்.முருகதாஸ் எல்லோரையும் நேசியுங்கள் எனவும் எழுதுவார்கள். சில நேரங்களில் வாசகம் மாறுவதும் உண்டு. சிம்பு Just Love என ஆங்கிலத்தில் எழுதி தமிழில் கையெழுத்திடுவார்.

# சாதி அரசியலுக்கு சாவுமணி அடிப்போம்

சமூக வளர்ச்சியில் இலங்கையில் வேறு எந்தவொரு சமூகமும் எதிர்கொள்ளாத சவால்களையும், தடைகளையும் மலையகம் எதிர்கொண்டு வருகின்றது. இதனால் தான் இந்நாட்டில் கால்பதித்து 200 வருடங்கள் கடந்தும் உரிய இலக்கை அடைய முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

உலகில் அடிமைப்பட்ட சமூகங்கள் எல்லாம் இன்று ஏனையவர்களை விடவும் உயர்ந்து நிற்கின்றனர். காரணம் அவர்கள் இலக்குடன் பயணித்தமையே ஆகும். ஆனால் மலையக சமூகம் இலக்கே இல்லாமல் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு வழிகாட்டக் கூடிய தீர்க்க தரிசனமான தலைமைத்துவம் மலையகத்திற்கு கிடைக்காமையும் பெரும் குறையாகும்.

மலையகத்தில் தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் மலையக பெருந்தோட்ட மக்களை "பின்தங்கிய சமூகம்" என்ற அடையாளத்துடனேயே அரசியல் நடத்துவதில் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். பின்தங்கிய சமூகம் என்ற அடைமொழியுடன் நாம் இன்னும் எவ்வளவு காலம் வாழப் போகிறோம் என்பதே எம் முன் உள்ள கேள்வியாகும்.

ஒவ்வொரு சமூகத்திலும் மக்களுக்காக உருவாகின்ற தலைமைகள் எல்லாம் தாம் சார்ந்திருக்கின்ற சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தி நிலையான சமூக வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்கு உந்து சக்தியாக இருக்கின்றனர். ஆனால் மலையகத்தில் நிலைமை வேறுவிதமாக காணப்படுகிறது.

ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய தலைவர்கள் பிரிவினைகளின் அடையாளமாகத் திகழ்கின்றனர்.

தற்போது மக்களுக்கு சேவை செய்து அவர்களின் மனதை வெல்ல முடியாத சில அரசியல்வாதிகள் சாதிப்பிரிவினைகளை தோற்றுவித்து வருவதாகவும் சாதி அடிப்படையிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் மலையகத்தில் தற்போது மக்கள் முணுமுணுக்கத் தொடங்கியுள்ளனர். இந்த நிலைமை தொடருமானால் மலையகம் பாரிய விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலையேற்படும்.

வெளியில் இருந்து பார்க்கின்றபோது மலையக சமூகம் ஒட்டுமொத்தமாகவே பின்தங்கியிருக்கின்றது. அதிலே இந்த சாதி வளர்ந்திருக்கிறது. அந்தச் சாதி பின்தங்கியிருக்கிறது என்று யாராவது கூறியதுண்டா?

> மக்களிடத்திலே ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய தலைவர்கள் பிரிவினைகளின் அடையாளமாகத் திகழ்கின்றனர்

சில இலட்சம் சனத்தொகையைக் கொண்ட நாம் பல இடங்களில் சிதறி வாழ்கின்றோம். அவ்வாறு இருக்கையில் எம்மில் மேலும் பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டால் யாருக்கும் நன்மை கிடைக் கப் போவதில்லை.

மலையகத்தை எடுத்துக் கொண்டால் இது தற்போது பிரிவினைகளின் பிறப்பிடமாகவே காணப்படுகின்றது. எதற்கெடுத்தாலும் பிரிந்து செல்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதாவது மாகாணம், மாவட்டம் , சாதி, அரசியல், தொழிற்சங்கம், அதேபோல் தோட்டங்களுக்கு இடையிலான பிரிவு, தோட்டங்களுக்கு பல கோயில்கள் அதற்குள் பல பிரிவுகள் என பிரிவினைகளின் ஒட்டுமொத்த அடையாளங்கள் பாவிக்கப்படுகின்றமை கவலைக்குரியது.

சாதி என்பது அவரவர் தமது குடும்பத்தோடு, உறவுகளோடு சம்பந்தப்பட்டது. கடந்த கால மரபுகள் மறக்கப்பட்டு திறமைக்கும், கல்விக்கும், உழைப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு உலக சமூக கட்டமைப்பு மாறியிருக்கின்ற நிலையில் சாதிய நடைமுறைகள் என்பது சரியா என சிந்தித்து பார்க்க வேண்டும்.

மக்கள் ஒன்றை மட்டும் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். சாதியை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்பவர்கள் எல்லாம் சுயநலவாதிகள். ஒருவர் சாதியினால் எதையாவது சாதிக்க நினைத்தால் அது அரசியலாக இருக்கலாம், பதவியாக இருக்கலாம், வருமானம் ஈட்டக்கூடிய ஏதாவது ஒன்றாக இருக்கலாம். அவ்வாறான விடயங்களுக்கு மாத்திரமே சாதி பயன்படுத்தப்படும். ஆனால் நமக்கு ஏதாவது ஆபத்து என்றால் ஒருவரும் ஏறெடுத்து பார்க்க மாட்டார்கள்.

ஆகவே தற்போது மக்களால் ஓரங்கட்டப்பட்ட, மக்களால் வெறுக்கப்பட்டு வருகின்ற அரசியல்வாதிகள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ள சாதியை முன்னிலைப்படுத்துவது சாதாரண விடயம். எனவே மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். மக்களுக்காக சமூகமே தவிர அரசியல்வாதிகளுக்காக அல்ல.

மலையகத்தில் தொழிலாளர்கள் வியர்வை சிந்தி சந்தா செலுத்துகின்ற எந்த பணத்திலும் சாதி இல்லை. போடுகின்ற வாக்குகளில் உயர்வு, தாழ்வு என்றில்லை. எல்லாவற்றுக்கும் ஒரே பெறுமதிதான். இவ்வாறு இருக்கின்ற போது எதற்கு அரசியல் தொழிற்சங்க செயற்பாடுகளில் சாதியை திணிக்கின்றார்கள் என்பதை மக்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மலையகத்திற்கு இன்றைய தேவை உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதியல்ல. மாறாக உயர்ந்த எண்ணங்கள், பண்புகளை உடைய சமூக நலனில் அக்கறைக் கொண்டு தீர்மானம் எடுக்கக் கூடிய அரசியல்வாதிகளேயாவர். அதைவிடுத்து குறுகிய எண்ணத்தில் சாதி ஊடாக அரசியல் நடத்த நினைப்பவர்கள் அல்ல.

வடக்கு கிழக்கில் இல்லாததா சாதிப் பிரிவினைகள். ஆனால் அவர்கள் தமிழ்த் தேசியம் என்ற ஒரே கொள்கையின் கீழ் இணைந்திருப்பதனாலேயே அவர்களது உரிமைப் போராட்ட அரசியலும் பலமாக உள்ளது.

ஆகையால் மலையகம் என்ற எண்ணக்கருவில் நாம் ஒன்றிணைய வேண்டும். எல்லாத் தரப்புகளில் இருந்தும் தலைவர்கள் உருவாக்கப்படல் வேண்டும். அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

பிரிந்து நின்று சாதிப்பதைவிட ஒன்று சேர்ந்து எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து குறுகிய காலத்தில் சாதிக்க முடியும். தற்போது மலையகத்திற்கு தேவை சாதியல்ல. சாதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம். ஆகவே எமது நோக்கத்தை அடைய நாம் அனைவரும் ஒன்றிணைந்து மலையகத்தின் சாதி அரசியலுக்கு சாவுமணி அடிப்போம்.

**எஸ்.சந்திரமோகன்**

**ஹட்டனில் வேலையுடன் பயிற்சி**

மலையக மண்ணில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்ற அடிப்படையில் பயிற்சிக்கப்பட்டு தொழில் கொடுக்கப்படும். சகல பிரதேசங்களிலிருந்தும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

- வயது:- 18-28 க்கு இடைப்பட்டவராக இருத்தல்.
- தகைமை:- G.C.E O/L க்கு மேல்
- பயிற்சி கொடுக்கப்படும் போது அடிப்படை சம்பளம் ரூ. 10,000/= பயிற்சியின் பின் சம்பளம் உயர்த்தப்படும். பயிற்சியின் பின் Diploma சான்றிதழ்களுடன் இவ் நிறுவனத்தில் பதவி உயர்வு வழங்கப்படும்.
- எனவே எமது கிளை முகாமையாளரிடம் தொடர்பினை ஏற்படுத்தி மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும்.

**The Manager:- 071-8694188/ 071-8643676/ 071-0760131**



# பொறாமை

மனிதனின் கேடிலும் கெட்ட கேடு பொறாமைதான். மனிதன் பிறக்கையிலேயே தன்னை அழிப்பதற்காக தானே தன்னோடு கொண்டுவந்த மிகப்பெரிய விடயமெனில் அது பொறாமையுணர்வாகத் தானிருக்கும். வெற்றி புரிபடாத நிலையிலும், வெல்வதன் அவசியத்தை உணராமலும், தனது இயலாமையை சரிசெய்துகொள்ள முடியாமல் தன்னைத்தானே கொன்றுவிட தன்னையறியாமலே தீர்மானித்து தன்மீதே நெருப்பள்ளி போட்டுக்கொள்ளும் செயலே பிறர்மேல் பொறாமை கொள்ளும் செயலும்.

ஆனால் அந்தப் பொறாமையென்ன சும்மாவிடுமா? முதலில் பிறரை நோகடித்து, கடைசியில் தன்னையும் அழித்து, தனது சுற்றத்தையே ஒன்றுமில்லாதவாறு அழித்துவிட்டு வெறும் தோல்வி கரிந்துபோன சாம்பலாகவோ அல்லது மனிதத்தை ஒழித்துவிட்ட ராட்சசப் பசியாகவோ மட்டுமே மிஞ்சிப்போகும்.


அத்தகைய பொறாமையால் அழிந்தோர் எண்ணற்றோர். அப்படி எரிந்துக் கருகிய மனதில் மரணம் முட்டி மிஞ்சிய சாம்பலில் கூட பொறாமை நீறுபூத்த சுடும் நெருப்பாகவே கனன்று பிறரின் நல்லெண்ணங்களைக் கூட எரிக்கத்தக்க கடுந் தீஞ்செயலாகவே மாறிவிடுகிறது.

அதேவேளை பொறாமையற்றோரைப் பாருங்களேன். பொறாமையில்லா மனசு ஒரு பூஞ்சோலை மாதிரி. அங்கே அன்பின் காற்று சில்லென்று வீசும், பெருந்தன்மையின் கடலென அவரின் மனசு விரிந்திருக்கும், கேட்டதைக் கொடுக்க இயலாவிட்டாலும் அவரால் நினைத்ததை செய்து தரமுடிகிறது. அவருக்கென மரங்கள் தனியே அசைகின்றன. தெளிந்த நீரோடையில் தெரியும் சிறுகல் மற்றும் மணலைப்போல, வெள்ளந்தியாய், பார்ப்பவருக்கு அவரின் முகத்தைக் காட்டும் கண்ணாடியைப் போல சுத்தப்பட்டு விடுகிறது பொறாமையில்லா மனசு.

உண்மையில் பொறாமையின்றி வாழ்வது எத்தனை இனிமை தெரியுமா? போகட்டுமே அவள்தானே என்று விட்டுத் தருதல் எத்தனை பெரிய சுகம் தெரியுமா? என் நண்பன் வாழ்ந்தால் நான் வாழ்ந்ததைப் போல மகிழ்வேன் என்று சொல்ல பொறாமையில்லா மனசு வேண்டியிருக்கு. என் தம்பி வாழணும் என் தங்கை வாழணும் என்று நினைக்க மனதிற்குள் எவ்வளவு கூடுதல் அன்பு வேண்டுமோ அவ்வளவு அன்பினையும் மனதில் தேக்கிவைத்துக் கொள்ளுங்கள்; பிறகு பாருங்கள், பொறாமை தானாகவே நம்மைவிட்டு ஒதுங்கிக்கொள்ளும்.

சூழ்நிலையின் புரிதலொன்றே பொறாமையொழிக்கும் பேராயுதமாகும். ஒரு காரியத்தை தன்னால் செய்திட முடியாது என்றெண்ணுகையில் செய்பவர்மேல் ஆற்றாமையானது வெறுப்பாகப் பொங்கியெழுகிறது. தன்னால் முடியாவிட்டாலென்ன பிறர் செய்துவிட்டனரே என்று ஆசுவாசப்பட்டுக்கொள்கையில் மனசு லேசாகிறது. அல்லது திறமையைப் பாராட்ட மனமில்லாதபோது சாதித்துச் சிரிப்பவரைக் காண்கையில் கோபம் வைக்கோல் எரிக்கும் தீயென மூளுகிறது.

வாழ்க்கைக்கு
வழிசொல்லும்
விழிப்புணர்வுத்
தொடர்
43



ஒரு செயலை நான் செய்ய எத்தனை பிரயாசைப்படுவேனோ அதைத் தானே அடுத்தவரும் செய்திருப்பார் என்று சற்று யோசிக்கத்தயங்கும் மனதில்மட்டுமே பொறாமை முள்குத்தி நம்மை மனிதத்தின் முடமாக்கிப் போடும்.

முதலில் தன்னை நம்பும் அளவு நாம் பிறரையும் நம்ப வேண்டும். எப்படி ஒரு காரியத்தை நாம் எல்லோரையும்விட சிறந்ததாக செய்ய எண்ணுகிறோமோ அப்படி அவரும் எண்ணுவார் என்பதை மனதளவில் ஏற்றல் வேண்டும். வெறும் மனிதரை நம்பும் வாழ்க்கையில் நீயா நானா எனும் சிக்கல் இல்லாமலில்லை, அதேநேரம் நம்மையெல்லாம் இயக்குமொரு மூல சக்தி, எல்லாவற்றையும் கொல்லவும் வெல்லவும் முடிகிற இயற்கை சக்தியொன்று உயர்ந்துநிற்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சுட நினைத்தால் சுடும் சூரியனையும், பொங்கி வெளியேற நினைத்தால் பாய்ந்தோடும் கடலையும், பிளந்து விழுங்க நினைத்தால் வாய்மூடிடமுடியாத பூமியையும் மீறி எப்படி நாம் நம்மை அத்தனைப் பெரியவன் என்று மெச்சிக் கொள்ளமுடியும்? ஆக நம்மை மீறிய சக்தி கடலாக காற்றாக வானமாக பூமியாக நெருப்பாகவும் பல உள்ளதெனில் அந்த ஐம்பெரும் சக்தியை தனக்குள் அடக்கியுள்ள ஒவ்வொரு உயிரும் அதற்கு நிகரான சக்தியையும் ஒன்றைப்போல் மற்றொன்றும் கொண்டுள்ளதுதானே? அதை உணர்ந்தவர் நானாயினும் நீங்களாயினும் ஏன் எவராயினும் இன்னொருவரை அவர் வெல்லத் தக்கவர் தானே? ஒரு தாயின் வயிற்றில் பத்துப் பிள்ளைகள் பிறக்கிறது எனில் அந்த பத்துமே பத்து வரம் என்பது இயற்கையாய் நடப்பதொன்றே. பிறகு அதில் ஒன்றுக்கு வானம் போல பெரிதாகச் சிந்திக்கும் மூளை உண்டெனில், ஒன்றிற்கு பூமியைப் போல தாங்கும் பலமும் இருக்கத்தானே செய்யும்?

ஆக ஒரு தாயின் பிள்ளைகள் பலர் என்றாலும், அந்த பலரில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சிறப்பு இருப்பதை நாம் அறிந்தவர்களெனில் நாமெல்லோருமே பூமிப் பந்திலிருந்து பிரிந்ததிலிருந்துப் பிறந்த, உயிர்கொண்ட சிறு சிறு சில்லுகள்தானென்பதையும் ஏற்றல் வேண்டும்.

பிறகு, எல்லோருமே இந்த ஐம்பெரும் பூதங்களில் அடக்கமெனில் யாரிங்கு பெரியவர்? யாரிங்கு சிறியவர்? நமக்குள் ஏற்றத் தாழ்வே அதை நாம் சரியாகப் புரியாதவரை தானே? அது புரிந்து நாமெல்லோரும் ஒன்றென அறிகையில் நமக்குள் பேதமெப்படி எழும்?

ஆனால் எழுகிறதே;

நமக்குள் பலவாறான பேதங்கள் எழுகின்றன; காரணம் மனிதன் தன்னைத் தான் மட்டுமே பெரிதாக எண்ணுவதால் அங்ஙனம் நடக்கிறது. தனக்கருகில் உள்ள உயிர்க்கும் தனக்குமான பந்தம் யாதெனப் புரியாமையால் பேதங்கள் எழுகிறது. ஒரு விலங்கு நம்மை அடிக்கையில் அது நமக்கு எதிராவதைப்போல, ஒரு மனிதன் சில பொருளை எடுத்து தனதென அடக்கிவைத்துக் கொள்கையில் அவர் எதிர்த்திசையில் சென்று விழுகிறார். ஒரு வெற்றி தனை விட்டுப்பிரிகையில் அது இன்னொருவரின் சொந்தமாகிறது. அந்த தனக்குக் கிடைக்காத வெற்றியை அவன் மட்டும் வைத்துள்ளானே என்று எண்ணுகையில் அங்கே பொறாமை பொங்கிவிடுகிறது.

அப்படிப் பொங்கும் பொறாமையை வேரறுக்க இரண்டு வழிகளுண்டு. அதில் ஒன்று தன்னையும் நம்புவது. எல்லாம் ஒன்றெனில் அவனால் முடிவது நம்மாலும் முடியுமெனில் அந்த முடியுமெனும் நம்பிக்கையை இதயத்தில் நிறைத்து வைத்துக்கொள்ளல் வேண்டும். அந்த நம்பிக்கைதான் நம்மை பலப்படுத்தும். வெல்லவைக்கும். வென்றவரின் வெற்றி பிறகு தன்னடக்கத்தையும் தரலாம். இரண்டாவது எல்லாம் ஒன்றெனில் பிறகு அவன் வென்றாலென்ன அல்லது நான் வென்றாலென்ன? முயன்றவன் வென்றான், முடிந்தவன் ஜெயித்தான். திறமையுள்ளவன் முன்வரட்டுமே என்று விலகி வென்றவனைப் பாராட்டுகையில், அந்தப் பாராட்டும் மனதைவிட்டு பொறாமை தானே விலகிக் கொள்கிறது.

உலகம் மிகச் சிறிது. உலகில் கிடைக்கும் ஒன்றுமே தன்னோடு நிலைக்கப் போவதில்லை. வாழ்க்கை என்பது நிற்குமொரு நொடி மூச்சுக்குள் அடங்கிப்போகும். ஒன்றுமே நிரந்தரமில்லை. பிறப்பும் இறப்பும் மாயை. எல்லாமே உண்மையற்றது. போலியானது. இந்தப் போலியான தோற்றத்தில் திரிந்து நமது ஆத்மாவை ஏமாற்றி அலையவிடுவதென நம் வாழ்நிலையைச் சுற்றி எண்ணற்ற சாத்தியக்கூறுகளுண்டு. எனவே எதன்மீதும் பற்றுக் கொள்ளாதீர்கள் என்பதொரு இரண்டாவது பார்வை.

## பொன்மொழிகள்

* தனது தேசம் இழந்து போனதற்காகக் கவலைப்படும் மன்னனின் நிலைக்கும், தனது பொம்மை உடைந்ததற்காக வருத்தப்படும் குழந்தையின் நிலைக்கும் வேறுபாடு அதிகம் இல்லை. * ஒருவன் கடும் முயற்சியினால் உயர்ந்த மலையின் சிகரத்தை அடைந்து விடலாம். ஆனால் அவன் அங்கேயே வாழ்ந்து விட முடியாது. * வெற்றிகரமாகப் பொய் சொல்ல வரம்பற்ற நினைவாற்றல் வேண்டும்.

* இளமை குறைகள் உடையது. நடுத்தர வயது சிரமங்கள் உடையது. முதுமை வருத்தங்கள் உடையது.

* வாழ்க்கை முழுவதும் இன்பமா! அதைக் காட்டிலும் நரகம் எதுவும் இருக்க முடியாது. * நெற்றியைக் காயப்படுத்திக் கொள்வதைவிட, முதுகை வளைத்துச் செல்வது நல்லது. * நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் என்னைவிட ஏதாவது ஒரு வகையில் சிறந்தவனாக உள்ளான்.

# அம்மம்மா மீது அதிக பாசம் ஏன்?



பொதுவாக குழந்தைகள் அம்மம்மா (தாயின் அம்மா) மீது வைக்கிற பாசத்தை தங்கள் மீது வைப்பதில்லையே என்று அப்பம்மாக்களுக்கு கடுமையான கோபம் வருகிறது. அப்படி என்ன தான் அந்த பாட்டி மந்திரம் போட்டு வச்சாளோ! என் கூட மட்டும் சேர்ந்தா என்னவாம்! என்று பேரன், பேத்திகளைக் கடிந்து கொள்கிறார்கள்.

உண்மையில் இதில் மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை. இதற்கு முழுக்க முழுக்க அறிவியலே காரணம்.

ஒரு குழந்தை எந்த இடத்தில் பிறக்கிறதோ அந்த இடத்தின் மீதுதான் பாசம் அதிகமாக இருக்கும். நம்நாட்டு வழக்கப்படி தாயின் தாய் வீட்டில் குழந்தைகள் பிறப்பது தான் அதிகம். அம்மம்மா தான் அந்தக் குழந்தையை மூன்று முதல் ஆறுமாதங்கள் வரை பராமரிக்கிறார். அதனால் அவர் மீது அந்தக் குழந்தைக்கு இயற்கையாகவே பாசம் வந்துவிடுகிறது.

அதனால் லீவு விட்டதும் அம்மம்மா வீட்டுக்குப் போக வேண்டும் என்று குழந்தைகள் துள்ளிக்கொண்டு நிற்கிறார்கள். அங்கே போய் ஒன்றிரண்டு மாதத்தைக் கழித்தால் தான் அவர்கள் மனமே ஆறுதலடைகிறது. !

## உதயசூரியன் பயோடேட்டா

பெயர் - பஷீர் சேகுதாவூத்

பதவி - அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் (பத்தோடு பதினொன்று தானே?)

ஒரே எதிரி - சொந்தக் கட்சியிலேயே மல்லுக்கு நிற்பவர்

தனித் திறமை - கட்சிக்கு தெரியாமல் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியை பெற்றது.

கவலை - பதவிக்காக மஹிந்த அரசிற்கு விசுவாசம் காட்டுவதாக சிலர் விமர்சிப்பது (அது பொய்யா?)

ஒரே கோபம் - அடிக்கடி தனித்துவம் பேசி சலுகைகளை இழக்க நேர்வது.

சமீபத்திய நாடகம் - கிழக்கு மாகாணத் தேர்தலின்போது கட்சிக்குத் தெரியாமல் பிரதியமைச்சு பதவியை துறந்தது... (பிறகு முழு அமைச்சு பெற்றது?)

பிடித்தது - அடிக்கடி அவரை(?) சீண்டிப் பார்த்து கோவப்படுத்துவது (யாரை?)

பிடிக்காதது - அவருக்கு அடங்கி ஒடுங்கி கட்சியில் இருப்பது.


தற்போதைய வேலை - வடமாகாணத் தேர்தலில் அரசுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட வைப்பது. (அரச (பதவி) விசுவாசமோ?)

பிடித்த பழமொழி - கூலிக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

ரவூப் ஹக்கீமிற்கு கூறுவது - மாமியார் உடைத்தால் மண்கலம் மருமகள் உடைத்தால் பொன்கலமா?(சபாஷ்....சூப்பர்)

(யாவும் கற்பனை)

எம். [illegible]



# தோட்டத்திற்கான பாலம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

## ஆதங்கப்படும் ஸ்டொக்கம் தோட்டமக்கள்

இந்தத் தேர்தலிலாவது எமக்கான பாலம் அமைக்கப்படுமா என அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா ஸ்டொக்கம் தோட்டமக்கள் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர்.

ஸ்டொக்கம் தோட்டத்தில் சுமார் 163 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் பயணம் செய்யும் வழியில் இருக்கும் ஆற்றைக் கடக்க பாலம் ஒன்று அமைக்கப்படாததால் இம்மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த ஆற்றைக் கடந்துதான் கவரவில தமிழ் மகா வித்தியாலயத்திற்கும் கவரவில சிங்கள பாடசாலைக்கும் மாணவர்கள் செல்ல வேண்டும்.



கடந்த ஐந்து வருடங்களுக்கு, முன்பு ஸ்டொக்கம் தோட்ட மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரபல தொழிற்சங்கவாதி ஒருவரால் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் கொங்கிரீட் தூண்களும் இடப்பட்டன. ஆனால் அதன் பின் பணிகள் கைவிடப்பட்டன.

இதைத் தொடர்ந்து பாலம் தொடர்பாக கடந்த 10 ஆண்டுகளாக இத்தோட்ட மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ள போதும், பாலம் அமைக்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

எனவே ஸ்டொக்கம் தோட்டமக்கள் குறித்த ஆற்றினை கடப்பதற்கு ஆற்றின் நடுவில் மரம் ஒன்றை போட்டு பயணத்தை மேற்கொள்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையின் காரணமாக ஆற்றில் நீர் மட்டமும் அதிகரித்து காணப்படுவதால் குறித்த ஆற்றினை கடப்பதில் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இம்முறை இடம் பெறவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் மலையக தொழிற்சங்க வாதிகள் மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்றுகொள்ளாமல் ஸ்டொக்கம் தோட்ட மக்களுக்கான முறையான பாலத்தையும் அமைத்துக்கொடுக்குமாறு ஸ்டொக்கம் தோட்டமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சா.சதீஸ்குமார்

## மரண நிதியிலும் மோசடியா?

மரணம் என்பது எப்போது எங்கே எப்படி நிகழும் என யாராலும் கூற முடியாது என்பதை அனைவரும் அறிந்த விடயம். ஒரு மனிதனுக்கு நடக்கின்ற ஏனைய சில நிகழ்வுகள் திட்டமிட்டு திகதி, நேரம், இடம் என்பன தீர்மானிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது. இந் நிகழ்வுகளுக்கு தேவையான பணமும் திட்டமிடப்படுகிறது. ஆயினும், மரணம் என்பது திடீரென நிகழ்வதால் அதற்கு தேவையான பணத்தை எல்லோராலும் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளியின் நாள் சம்பளத்தில் குறித்த ஒரு தொகை பணத்தை மரண நிதிக்காக சேமித்து வைப்பர்.

இவ்வாறு தொழிலாளி சம்பளத்தில் சேமித்து வைக்கப்பட்ட பணத்தில் இருந்து ஒரு மரண நிகழ்வுக்காக வழங்கப்பட்ட ரூபா [illegible] ஐ நானுஓயா, கிரிமிட்டிய பிரதேசத்தில் ஒரு நபர் மோசடி செய்துள்ளார்.

இதற்கு எதிராக பொதுமக்கள் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த நபர் பிரபல தொழிற்சங்கமொன்றின் பிரதேசத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் செயற்பாடுகள் அனைத்தும் தோட்ட நிர்வாகத்துக்கு சார்பாகவே இருக்கும் எனக் கூறும் பொதுமக்கள் இதனால் தமது அடிப்படை உரிமைகளைக் கூட பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாக கூறுகின்றனர்.

எம்.பாஸ்கர்-கிரிமிட்டிய


தேவை
பல்வேறு தொழில் வாய்ப்புக்கள்.
ஜேம், கோடியல், பிஸ்கட், சொக்கலட் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, பொதியிடல், களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வரையான ஆண்/பெண் தேவை.
Driving, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் உண்டு.
18000/= - 30000/= க்கும் மேல் வருமானம்...! குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:- 077-8508118



## புதிர் BOX

### கண்ணாமூச்சி











கண்கள் சொல்லும் பார்வை யாருடையது? கண்டுபிடியுங்கள்

### சூப்பர் சூப்பர்






a
ப்ரியாமணி



b
அஞ்சலி



c
சரண்யா
மோகன்





படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...

### பெரியவங்க சொன்னது!

* எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க காரணம் வேண்டியதில்லை.
துன்பத்துக்கு மட்டுமே காரணம் உண்டு.
* துக்கப்படுவதால் துக்கமும், கவலைப்படுவதால் கவலையும், கோபப்படுவதால் பகையும் விலகப் போவதில்லை
* நீ செல்கிற பாதையை தெளிவாக அறிந்துகொண்டால் போகிற ஊர் சீக்கிரமே வந்துவிடும்.

## வார்த்தைப் புதிர் - 65



### இடமிருந்து வலம்

01. சமீபத்தில் காலமான புகழ் பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநர் 'அமைதிப் படை' படத்தை இயக்கியவர்.
08. அரசனின் மனைவி.
09. 2014 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடைபெறவுள்ள இடம்.
16. கொஞ்சல் வார்த்தைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
17. - நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்.
18. அண்மையில் விஜய் சேதுபதி நடித்து வெற்றிபெற்ற திரைப்படம்.

### வலமிருந்து இடம்

02. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு....
04. கிராமம் அல்ல.
05. வீரமாமுனிவர் இயற்றிய காவியம்.
06. அங்காடி என்றும் சொல்லலாம்.
13. மொட்டு. (குழம்பியுள்ளது)
14. புண். (குழம்பியுள்ளது)
20. அரசியல்வாதிகளுக்கு இது மிகவும் பிடிக்கும்.

### மேலிருந்து கீழ்

01. வாசனை.
02. ஊர் ஊராக சுற்றி வருபவரைக் குறிக்கும் சொல்.
03. முடிவு என்றும் சொல்லலாம்.
04. அசல் எதிர்ப்பதம்.
10. கையிலுள்ள இதைப் பார்த்தும் ஜோசியம் சொல்வர்.
16. காது கேட்காதவன். (குழம்பியுள்ளது)

### கீழிருந்து மேல்

07. வாணிகம் செய்பவன்.
08. உயர் அழுத்த மின்சாரக் கம்பங்களில் இந்த வாசகம் இடம் பெற்றிருக்கும்.
11. இதில் வடை வைத்து, எலியை பிடிப்பார்கள்.
12. மெல்லிய கோல தகடு.
15. விலங்குகளின் ஒரு உறுப்பு.
17. உணவுப் பொருளாகும் தானியம்.
18. ஆதவன் என்றும் பொருள் உண்டு.
19. அவுஸ்திரேலிய தேசிய விலங்கு
20. பசு தருவது.

# எலிப்பொறியில் சிக்கி உதிர்ந்த பிஞ்சுகள்



அன்று ஞாயிற்றுக்கிழமை, பல நாட்களாக வெளுத்துக்கட்டிய மழை ஓய்ந்து வானம் வெளுத்திருந்தது. மழை பெய்வதற்கான அறிகுறிகளே அன்று தென்படவில்லை. பரபரவென வீட்டுவேலைகளை செய்து முடித்த நாகலிக்கா வசந்தி வீட்டுத்தோட்டத்திலுள்ள கிணற்றடியில் ஆடைகளைத் துவைத்து காயபோட்டுவிட்டு பிற்பகல் 11.30 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்தாள்.

எந்நேரமும் துருதுருவென அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கின்ற தன்னுடைய செல்வங்களின் சத்தமெதுவும் கேட்காமையினால் சற்று பதற்றப்பட்டவர் அங்குமிங்கும் தேடிப்பார்த்தபோதும் அவர்கள் கண்களுக்கு உடனடியாகத் தென்படவில்லை. எனினும், இருவரும் வீட்டிற்குள் படுத்துகிடந்தனர்.

கண்களை கூசும் வெயிலில் நீண்டநேரம் வெளியிலேயே இருந்து வந்ததாலோ என்னவோ நாகலிக்காவுக்கு தனது இரண்டு செல்வங்களையும் உடனடியாகக் கண்டறிந்து கொள்ளமுடியவில்லை.

தனது தோளில் கிடந்த சால்வையால் முகத்தை துடைத்துக் கொண்டு வீட்டுக்குள் உற்றுநோக்கிய போதே இருவரையும் கண்டுள்ளார். அவ்விருவரையும் கண்டதன் பின்னரே நிம்மதிப் பெருமூச்சுவிட்டு அவர் நிம்மதியடைந்தார்.

மண்குடிசைக்குள் மண்ணோடு மண்ணாக புரண்டு விளையாடும் செல்வங்கள் இரண்டும் தாம் விரும்பியது போலவே உறங்கிக்கொண்டிருந்ததை கண்ட தாய், களைப்பு ஆறுவதற்காக கொஞ்சம் தண்ணீரை குடித்துவிட்டு பிள்ளைகளை ஒழுங்காக படுக்க வைப்பதற்காக இருவரில் ஒருவரைத் தூக்கியுள்ளார்.

தன்சொல்படி கேட்கும் செல்வங்கள் அன்று தூக்குகின்ற போது வளைந்து நெளிந்துள்ளனர். தூக்கித் தோளில் சுமத்துவதற்கு அத்தாய் பெரும் சிரமப்பட்டுள்ளார். முதலில் தூக்கிய மூத்த ஆண் குழந்தையின் கழுத்து செடியிலிருந்து ஒடிந்த பூ போல வளைந்து தொங்கியுள்ளது.

செல்வங்களின் உடல்களில் ஏதோவொரு மாற்றம் அந்த தாய்க்கு தென்பட்டுள்ளது.

சந்தேகம் கொண்ட தாய் மகனே, மகனே என் செல்வங்களா? என உரத்தக்குரலில் இருவரையும் எழுப்புவதற்கு முயற்சித்துள்ளார்.

அந்த முயற்சி கைகூடாத நிலையில் நெஞ்சு படபடக்க என்னசெய்வதென்று தெரியாத அந்த அபலை மரணவோலம் எழுப்பி விட ஓரிரு நிமிடங்களில் ஊரே வீட்டுக்கு முன்பாகத் திரண்டுவிட்டது.

ஆளுக்கொரு குழந்தை என தூக்கிக்கொண்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு ஓடோடி சென்றபோதிலும் அவ்விருவரையும் இனியும் காப்பாற்ற முடியாது என்றும் காலன் முந்திக்கொண்ட விடயமும் அப்போதுதான் தெரிந்தது.

செய்தி கேட்ட மனங்களை சுக்கு நூறாக்கி கிராமத்தையே சோக வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்தது.

இந்த சோகமான சம்பவம் மாத்தறை கம்புறுப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நத்தேகொட கிராமத்தில் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கூலிவேலை செய்கின்ற 31 வயதான ரொமேஸ் பிரியந்த தனது மூத்த மகளான 13 வயதான மதுஷா லக்மாலியை அறநெறி பாடசாலைக்கு (தாம் பாசல்) அனுப்பிவைத்துவிட்டு அன்றைக்கு ஏதாவது வருமானத்தை தேடிக்கொள்வதற்காக வெளியில் சென்றுவிட்டார்.

வீட்டிலிருந்த உணவை இரு குழந்தைகளுக்கும் ஊட்டிய 30 வயதான நாகலிக்கா வசந்தி அழுக்குத்துணிகளை வீட்டுத்தோட்டத்திலுள்ள கிணற்றடியில் துவைத்துக் கொண்டிருந்தார்.

அப்போதெல்லாம் ஆறுவயதான ஒசந்த திவங்க தனது மூன்றுவயது தம்பியான அகில அனுஷ்க ஆகிய இருவரும் சேர்ந்து வீட்டுத்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர்.

பிற்பகல் 11.30 மணியிருக்கும். இருவரும் தாயாருக்கு தெரியாமல் வீட்டுக்கு வந்துவிட்டனர். குடிசை வீடு என்பதனால் கதவுகளை திறப்பதற்கு அவர்கள் எவ்விதமான சிரமங்களுக்கும் முகம் கொடுக்கவில்லை.

விளையாட்டு களைப்பில் ஏதாவது உண்ணவேண்டும் என்று நினைத்தவர்கள் சொக்லேட் போன்றதொரு வாசனையை உணரவே, அங்கும் இங்கும் தேடிப்பார்த்தவர்கள் வீட்டுக்குள் கிடந்த பக்கட்றொன்றை எடுத்து சாப்பிட்டும்விட்டனர். அண்ணனும் தம்பியும் மாறிமாறி சாப்பிட்டுவிட்டு இருவரும் அவ்விடத்திலேயே சரிந்து விட்டனர். தாங்கள் சொக்லேட் சாப்பிடுகின்றோம் என்று அந்த பிஞ்சுகள் சாப்பிட்டது சொக்கலேட் அல்ல. எலியை கொல்வதற்காக வைக்கப்படும் எலி விஷமென்பது பிரேத பரிசோதனைகளின்போதே தெரியவந்தது.

அன்றாடம் கிடைக்கும் கூலி வேலைகளில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு வாங்கிவருகின்ற உணவு பொருட்களையும், ஆடைதுணிவகைகள் மற்றும் பிள்ளைகளின் புத்தகங்களையும் கொறிக்கின்ற எலிகளை இல்லாது அழித்துவிடவேண்டும் என்பதே அந்த குடும்பத்தலைவனின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஒவ்வொருநாளும் இரவு எலிவிஷமருந்தை எலிநடமாடும் இடங்களில் போட்டுவிடும் அவர், காலையில் எழுந்து இறந்துகிடக்கும் எலிகளை தூக்கிவீசிவிட்டு வீட்டையும் சுத்தம் செய்துவிடுவார். அவரது எலிவேட்டையில் அன்றாடம் ஓரிரு எலிகளாவது சிக்கிக்கொள்வதுண்டு.

மீதமிருகின்ற எலி விஷமருந்தை வீட்டின் கூரையில் செருகி வைப்பதனையே அவர் வழமையாகக் கொண்டிருந்துள்ளார், சம்பவம் இடம்பெற்ற முதல் நாள் இரவும் அவ்வாறே செய்துள்ளார் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

அன்று கூரையில் வைக்கப்பட்ட அந்த பக்கற்றே பகல்வேளையில் தரையில் விழுந்துள்ளதுடன் அதனையே இவ்விரு பிஞ்சுகளும் சொக்கலேட் என நினைத்து எடுத்து சப்பிச் சாப்பிட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

நவீன வளர்ச்சியடைந்த் யுகத்தில் புது புதுவகையான இயந்திரங்கள் மட்டுமல்ல இலகுவாக விஷமேறக்கூடிய விஷங்களும் கண்டுப்பிடிக்கப்படுவதனால் அவை தொடர்பிலும் பெரியவர்கள் மிகமிக கவனமாக இருக்கவேண்டும். குறிப்பாக பெற்றோர்கள் இவை தொடர்பில் விழிப்பாகவே இருக்கவேண்டும்.

குறிப்பாக சிறுகுழந்தைகள் இருக்கின்ற வீடுகளில் எலிகள் மட்டுமல்ல விஷஜந்துக்கள் தொல்லை கொடுக்காமல் பார்த்துக்கொள்வதற்கு மாற்றுவழிமுறைகளைக் கையாளவேண்டுமே தவிர நிலத்தில் சிந்துமளவிலான விஷங்களை பயன்படுத்துவதனை முற்றாகவே கைவிடவேண்டும். எலிக்கு விஷம் வைக்கும் செயற்பாடுகளில் பெற்றோர்கள் விழிப்பாக இருந்திருந்தால் அந்த இரண்டுபிஞ்சுகளின் உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம்.

**நாடோடி**




## காதலை வளர்க்க அரசாங்கம் நடவடிக்கை

[illegible]



கண்டிப்பா சொல்றேன். நான் உன்ன விட்டுப் போகனும்னு நெனக்கல. எனக்கு உன்னோட சேர்ந்து வாழனும்னு ரொம்ப ஆசை. ஆனால், என்னால உன்னை பிரிந்து வாழ முடியல திவ்யா. என்னை மன்னிச்சுடு. நான் இந்த உலகத்தை விட்டுப் போறேன்.

வலியும் காதலும் நிரம்பிய இந்த வார்த்தைகள் தர்மபுரி இளைஞன் இளவரசனின் கடைசி வார்த்தைகள்!




# சா(தீ)யில் மரணித்த காதல்

இளவரசன்- திவ் என்ற சாதாரண மனிதர்களின் காதல் தமிழகத்தில் யாரும் மறக்கமுடியாத சுவடுகளாக பதிவாகி விட்டது. கலப்புத் திருமணம் செய்ததால் ஏற்பட்ட மோதல், வன்முறை என சினிமாவை போல் நீண்டு கொண்டே சென்ற இவர்களின் காதல் சோகமயமான ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றது..

இந்தியாவின் தர்மபுரி மாவட்டம் நாயக்கன்கெட்டாய் நத்தம் கொலனியைச் சேர்ந்தவர் இளவரசன். செல்லன் கொட்டாயைச் சேர்ந்தவர் திவ்யா. இருவரும் எல்லோரையும் போல காதல் வயப்பட்டனர். இருவரும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள். சாதியை முன்னிறுத்தி இருவீட்டிலும் எதிர்ப்புக் கிளம்பியது.

எதிர்ப்பை மீறி இருவரும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டனர். இதையறிந்த திவ்யாவின் தந்தை நாகராஜன் (53) நவம்பர் 7 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார். இதனால் ஆத்திரமுற்ற திவ்யாவின் சமூகத்தினர் இளவரசனின் சொந்தக் கிராமமான நாயக்கன்கொட்டாய் நத்தம்காலனி மற்றும் கொண்டம்பட்டி, அண்ணாநகர் ஆகிய கிராமங்களுக்குள் புகுந்து நூற்றுக்கணக்கான வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தியக் கிராமங்களில் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் சாதித் தீ வட மாவட்டங்கள் முழுவதும் பரவி அல்லோலகல்லோலப்பட்டது. கிராமங்களைப் பொசுக்கிய சாதித் தீயினால் வலிமை மிக்க காதலை எதுவும் செய்துவிட முடியவில்லை. இளவரசனும் திவ்யாவும் தம்பதிகளாக சேர்ந்து வாழ்ந்தனர். இருந்தும் தந்தையின் பிரிவும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையும் திவ்யாவின் இதயத்தை ரணமாக்கியிருந்தது.

பத்து மாதங்கள் உருண்டு ஓடின. இந்நிலையில் திவ்யா தன் தாயைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறி தன் சொந்த ஊருக்கு கிளம்பிச் சென்றார். அதன்பிறகு திவ்யா வீடு திரும்பவில்லை.

இதுபற்றி தர்மபுரி டவுன் பொலிஸில் இளவரசன் புகார் செய்தார். அதேவேளை திவ்யாவின் தாய் தேன்மொழி சென்னை உயர்நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

தன் மகள் திவ்யாவை இளவரசன் பலவந்தமாக அடைத்து வைத்திருக்கிறார். திவ்யா தன்னை தொடர்பு கொண்டு இளவரசன் தன்னை மிரட்டுவதாகவும் தன்னை மீட்டுச் செல்லுமாறு குறிப்பிட்டதாகவும். தன் மகளை பொலிஸார் மீட்டுத்தர வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

(தொடர்ச்சி 28 ஆம் பக்கம்)



# 8 வயதுச் சிறுமியின் 3 அடி கூந்தல்



8 வயது உடைய சிறுமியொருவர் 3 அடி நீளமான கூந்தலுடன் விளங்குகின்றமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த பொட்னா ஸ்டொட்ஸ்கா என்ற சிறுமியே இவ்வாறு 8 வயதில் 3 அடி நீளமான கூந்தலுடன் விளங்குகிறார்.

இவர் தனது நான்காவது வயதிலிருந்து தலை மயிர் வெட்டுவதை தவிர்த்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனிலிருந்து கடந்த டிசெம்பர் மாதமே இவரது குடும்பம் லண்டனுக்கு சென்றுள்ளது. லண்டனில் கல்வி பயின்றும் வரும் இச்சிறுமிக்கு தலையை வாருவதற்காக இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்படுவதாக அவரது தாய் கூறியுள்ளார்.

'நான் எனது கூந்தலை நேசிக்கின்றேன். ஏனெனில் என்னுடைய கூந்தலின் நீளத்தை போல யாருடைய கூந்தலும் நீளமில்லை' என பொட்னா கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

'அம்மா இதற்கு மேல் எனது தலைமயிரை வெட்ட வேண்டாம் என்று நான்கு வயதில் எனது அம்மாவுக்கு கூறினேன்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொட்னாவின் கூந்தலை 10 நாட்களுக்கு ஒரு தடவை கழுவுவதாகவும் இதன்போது, ஷெம்போ மற்றும் கண்டிசனர் ஆகியவற்றை பயன்படுத்துவ தாகவும் அவரது தாய் ஒல்கா (வயது 36) தெரிவித்துள்ளார். இதற்காக இரண்டுபேரும் இரண்டு மணித்தியாலங்களை செலவிடுகின்றனர்.

'உக்ரைனில் இருக்கும்மட்டும் பொட்னா பிரபல்யமடையவில்லை. லண்டனுக்கு சென்றபின் பொட்னாவின் பாடசாலை நண்பிகள் அவளது கூந்தலை பார்த்து பிரமித்து போனார்கள்' என பொட்னாவின் தாய் தெரிவித்துள்ளார். எனது எதிர்காலம் 'எனது கூந்தலின் நீளத்திலேயே தங்கியுள்ளது' என பொட்னா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகம் பேசுகிறது

## பூனையை திருமணம் முடிக்க விரும்பும் பிரபல ஆடை வடிவமைப்பாளர்



நான் எனது செல்லப் பிராணியான பூனையைத் திருமணம் செய்யவேண்டும் என்று ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல ஆடை வடி வமைப் பாளரான கார்ல் லெகபீல்ட் தெரிவித் துள்ளார். தற்போது கார்லின் வீட்டில் ஆடம்பர வாழ்க்கை வாழும் அவரது செல்லப்பிராணியான சௌபெட்டி என்ற பூனையை கார்ல் திருமணம் செய்ய விருப்பப்பட்டுள்ளார்.

இது குறித்து கார்ல் பேட்டி யொன்றின் போது, விலங்கு களை திருமணம் முடிப்பது சட்டத்திற்கு புறம்பான செயலாக இருப்பது ஏமாற்றமளிக்கிறது. மேலும் இவ்வாறு பூனையின் மீது காதலில் விழுவேன் என ஒருபோதும் நான் நினைத்ததில்லை என தெரிவித்துள்ளார்.

## 22 வயதுப் பெண்ணை மணந்த 92 வயதுத் தாத்தா:
## ஒரே மேடையில் பேரன்களுடன் திருமணம்



தன்னை விட 70 வயது குறைவான 22 வயது இளம் பெண்ணை கடந்த வாரம் இவர் திருமணம் செய்து உள்ளூர் இளைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இவருடன் இவரது பேரன்கள் இருவருக்கும் ஒரே மேடையில் திருமணம் நடந்தது என்பது தான்.

தலைநகர் பாக்தாத் அருகே உள்ள சமாராவை ஒட்டியுள்ள குப்பான் கிராமத்தைச் சேர்ந்தவர் முசாலி முகம்மது அல்-முஜ்மாமி.

தற்போது 92 வயதைக் கடந்த இவர், பூர்வீகமாக விவசாய தொழில் செய்து வந்தார். இவருக்கு 16 குழந்தைகள் பிறந்தன. 3 ஆண்டுகளுக்கு முன்னர் இவரது மனைவி 58 ஆவது வயதில் காலமானார்.

'பொண்டாட்டி செத்தா... புது மாப்பிள்ளை' என்ற பழமொழிக்கு நான் ஒன்றும் விதிவிலக்கல்ல என்பதை இந்த 92 ஆவது முதியவர் நிரூபித்துள்ளார்.

சுமார் 4 மணி நேரம் நீடித்த இந்த திருமண விழாவில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடுதல் என்ற அனைத்து கேளிக்கை அம்சங்களுடனும் ஆடம்பரமாக அரங்கேறியது.

எனது பேரன்களுடன் ஒரே மேடையில் திருமணம் செய்து கொண்ட அனுபவம் மிகவும் மகிழ்ச்சியானது.

20 வயதே ஆன இளைஞனாக என்னை உணர்கிறேன் என்று நமட்டுச் சிரிப்புடம் கூறுகிறார்.

## 40 ஆண்டுகளாக ஒரே உடையில் பாடசாலைக்குச் சென்ற ஆசிரியர்



டெக்சாஸ் நகரைச் சேர்ந்த 63 வயதான ஆசிரியர் ஒருவர் கடந்த நாற்பது வருடங்களாக ஒரே உடையுடன் பாடசாலைக்கு சென்றிருக்கிறார். அண்மையில் கல்லூரியின் பழைய படங்களை எடுத்துப் பார்த்தபோது நிர்வாகமே வியப்பில் ஆழ்ந்துவிட்டதாம்.

# என்னாச்சி...!

## சுத்தம் சுகம் தரும்



அன்று ஒரு புதன் கிழமை நண்பர்களோடு டவுனுக்கு சென்றிருந்தேன். மேலும் எங்களுடைய வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு சிற்றுண்டி விடுதி ஒன்றில் தேநீர் குடிப்பதற்காக நுழைந்தோம். அந்த நேரம் கடையின் பணிப்பாளர் ஒரு ஸ்டூலில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தார். தன் வலது கையால் கணுக்கால், பாதம் ஆகியவற்றை அழுத்தி தேய்த்தார். பிறகு, அதே கையால் போண்டா வடை எல்லாவற்றையும் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறினார். மேலும் தனது வலது கையாலேயே வியர்த்த அவருடைய கழுத்தையும் நெஞ்சையும் தடவிக் கொண்டிருந்த அவர் கையை கழுவாமலேயே மறுபடியும் பரிமாறினார். நாம் உட்கொள்ளும் உணவு சுகாதாரமானதாகவும் சத்தானதாகவும் இருப்பது முக்கியமல்லாவா?

இவ்வாறு சுகாதாரம் இல்லாத உணவு விடுதிகளில் சாப்பிடுவதால் எத்தனை விதமான நோய்கள் எம்மை தாக்கும் என்பதை அறிவீர்களா? முடிந்தளவு இவ்வாறான முகம் சுளிக்கச்செய்யும் கடைகளுக்கு விடுதிகளுக்கு செல்லாமல் தவிர்ப்பதே நல்லது.

## எப்படி எல்லாம் ஏமாத்துறாங்க

எங்கள் வீட்டு நீர்த்தாங்கி மோட்டர் பழுது. அதை சரி செய்ய ஒரு மெக்கானிக்கிடம் சொல்லியிருந்தோம். அவர் வரும்போது இன்னொருவரையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தார். பின்னர் மோட்டாரை சோதனை செய்தார்கள். ''இந்த மோட்டாரை சரி செய்வதற்கு சில பொருட்கள் வாங்கணும்'' என்றார்.



என்னென்ன பொருட்கள் என்றுகேட்டதற்கு ஏதேதோ பொருட்களின் பெயர்களைச் சொன்னார். நானும் இவற்றை நம்மால் போய் வாங்க முடியாது என்று நினைத்து அவரிடம் 2000 ரூபாய் கொடுத்து அனுப்பினேன். திரும்பி வந்தவர்கள், அரை மணி நேரத்தில் மோட்டாரை சரி செய்து விட்டார்கள்.

''1745 ரூபாய்க்கு ஸ்பேர்ஸ் வாங்கினோம்'' என்று ரசீதையும் மீதிப்பணத்தையும் கொடுத்தார்கள். நானும் கூலியைக் கொடுத்து அனுப்பினேன். அரை மணி நேரம் கழித்து மோட்டாரின் அருகில் ஒரு ரசீது கிடந்ததை எதேச்சையாகப் பார்த்தேன். அதில் மோட்டாருக்குத் தேவைப்பட்ட அதே பொருட்கள், அதே திகதி, விலை மட்டும் குறைவு. எனக்கு அதிர்ச்சி! கடையில் கொடுத்து ரசீதை மறைத்துவிட்டு, இவர்களாகவே ஒன்றைத் தயார் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பது புரிந்தது. வெறும் 800 ரூபாய்க்கே பொருட்கள் வாங்கியிருந்தார்கள்.

இப்படி ஏமாந்துவிட்டோமே என்று வருத்தமாக இருந்தது. இப்படிப்பட்ட வேளைகளில் நாமே சென்று தேவைப்படும் பொருட்களை வாங்கிக் கொடுப்பதுதான் சரி.

## பொது இடத்தில் இப்படியா செய்வது



கடந்த வாரம் என் தோழி தன் 9 வயது மகனை பாடசாலைக்கு பேருந்தில் ஏற்றி விடுவதற்காக நின்று கொண்டிருந்தாள். அப்போது அருகில் இருந்த சுவரொட்டியில் ஏதோ ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. உடனே அவள் மகனை அதைப் படிக்கச் சொன்னாள். அவன் எழுத்துக்களைக் கூட்டி தவறுதலாகப் படித்தான். அவ்வளவுதான். தோழிக்கு கோபம் வந்துவிட்டது. அவனை அடித்துவிட்டார். ''எவ்வளவு பணம் கட்டிப் படிக்க வைக்கிறோம். இதுகூட படிக்கத் தெரியலியா?'' என்று சொல்லி தலையில் கொட்டி மீண்டும் அடித்தார். அதற்குள் பேருந்து வந்துவிட அவன் அழுதுகொண்டே ஏறிச் சென்றான்.

குழந்தைகளை அடிப்பது தவறு. அதுவும் பொது இடத்தில்வைத்து அடிப்பது மாபெரும் தவறு. பணம் அதிகம் கட்டி படிக்க வைத்தால் மட்டும் படிப்பு வந்துவிடுமா என்ன?

## எப்படி எல்லாம் ஏமாத்துறாங்க

எனது தோழி பிரசவத்திற்காக கொழும்பில் உள்ள பிரபல மருத்துவணையில் சேர்ந்திருந்தாள். அவளுக்கு இது தலைப்பிரசவம். அன்று இரவே அவளுக்கு அழகிய பெண்குழந்தை பிறந்தது. மறுநாள் பேபி டொக்டர் குழந்தையை சோதனை செய்து குழந்தைக்கு இதயத் துடிப்பு அதிகமாக இருக்கிறது உடனே எக்ஸ்ரே, ஈசிஜி, எக்கோ எடுக்கவேண்டும் என்று சொல்லி அத்தனை பரிசோதனைகளையும் செய்துவிட்டு இன்று மாலை ரிப்போர்ட் வரும் அதைபார்த்துவிட்டு நீங்கள் போகலாம் என்றார்.

ஆனால் அன்று மாலை வரை அந்த வைத்தியர் வரவில்லை. மறுநாள் காலை ரிப்போர்டுடன் வந்து குழந்தையை பார்த்து பின் டிஸ்சாஜ் செய்யுங்கள் என்று கூறியுள்ளார். ஆனால் அதற்கடுத்த நாள் காலையில் வேறொரு வைத்தியர் குழந்தையை பார்த்து விட்டு குழந்தையை 24மணி நேரம் அவதானிப்பில் வைக்க வேண்டும் என சொல்லி அவர் சில டெஸ்டுகளை எடுத்துப் பார்த்துவிட்டு தோழியிடம் ''மறுநாள் காலைதான் குழந்தையின் நிலை (கண்டிஷன்) சொல்லமுடியும்'' என்றார். அவளோ பதை பதைத்துப்போனாள். அத்தனை வலிகளைத் தாங்கி பெற்ற குழந்தைக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் கலங்கி அழுகையும் கண்ணீருமாகத் தவித்தாள்.

அன்று இரவுமுழுவதும் என்தோழி சிறிதும் உறக்கமின்றி தவித்தாள்.

மறுநாள் காலை வருவதாக சொன்ன இரண்டு வைத்தியர்களும் அன்று மாலை 6.00 மணிக்கு வந்து குழந்தையைப்பார்த்தார்கள். பின் குழந்தைக்கு ஒன்றுமில்லை வீட்டுக்கு செல்லலாம் என்றார்கள்.

மேலும் வைத்தியசாலையில் அவர்கள் தந்த பில் தொகையைப்பார்த்துவிட்டு அதிர்ச்சியடைந்தோம். குழந்தைக்கு ஏகப்பட்ட டெஸ்டுகள் என்று ஒரு பெரும்தொகை பணத்தை வசூலித்திருந்தார்கள். வைத்தியர்களுக்கு அது தொழில் என்றாலும் நோயாளிகளுக்கு...? வைத்தியர்கள் நேரம் தவறாமல் இருக்க வேண்டும். காசு பறிக்க வேண்டும் என்பதற்காக நோயாளிகளின், அவர்களது உறவினர்களின் மனநிலைமையைப் புரிந்து நடந்துகொள்ள வேண்டும்



தகவல் தொகுப்பு ஆர். அபி


தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
# வித்யாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை


## வினாத்தாள் - 01 45 நிமிடம்


1 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

⇨ 1ம், 2ம் வினாக்களில் காணப்படும் மூன்று அடைப்புக்களில் இரண்டிலுள்ள உருக்களுக்கிடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. மற்றதில் அத்தகைய ஒற்றுமை இல்லை. அதனைத் தெரிவு செய்க

1.

i 

ii 

iii 

2.

i 

ii 

iii 


3. பணக்காரனுக்கு ஆடம்பரம் போல ஏழைக்கு ....................................

1. வறுமை 2. சிக்கனம் 3. நிவாரணம்


4. சிறிதாக்கல் ⟶ பெரிதாக்கல் போல குறைத்தல் ⟶ ..........................


1. அதிகரித்தல் 2. பரவுதல் 3. விருத்தி செய்தல்


⇨ கோலத்துக்கு ஏற்ப இடையில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


5. 


1 


2 

3 


6. 


1 


2 


3 

7. தொடரில் அடுத்து வருவது யாது?




1 

2 

3 

8. தரப்பட்ட உதாரணத்துக்கு அமைய ? என்ற இடத்தில் வரவேண்டிய உரு எது?




➪ பின்வரும் தொடர்புகளில் அடுத்து வரவேண்டியது எது?

9. மதுமிதா, தாரங்கி, கிருசியா, யார்வசி

1. சியாத்தா 2. தர்மினி 3. சிரோமி

10.



11. சுகந்தி தனது பிரயாணத்தின் 2/5 பங்கைப் பேருந்து மூலமும் 1/5 பங்கினைப் புகையிரதத்தின் மூலமும் மேற்கொண்டாள். மீதியை மோட்டார் சைக்கிள் மூலம் மேற்கொண்டாள். மோட்டார் சைக்களில் சென்ற தூரம் 60km ஆயின் முழுப்பிரயாணத் தூரம் என்ன?

1. 150 km 2. 120 km 3. 300 km

12. ஒரு நீர்த்தொட்டியினுள் 50 l நீர் இருந்தது. நீர்ப்பம்பியை இயக்கி நீரின் கனவளவை இரு மடங்காக்குவதற்கு 4 நிமிடம் எடுத்தது. நீர்ப்பம்பியைத் தொடர்ந்து இயக்கி நீரின் கனவளவை ஆரம்பக் கனவளவைவிட ஐந்து மடங்காக்குவதற்கு மேலும் எவ்வளவு நேரம் எடுக்கும்?

1. 12 நிமிடம் 2. 20 நிமிடம் 3. 16 நிமிடம்


13. நந்தினியிடம் 2 நிறச்சட்டைகள், 2 வகைத்தொப்பிகள், 3 வகை வளையல்கள் என்பன உண்டு. இவற்றைக் கொண்டு எத்தனை வித்தியாசமான சேர்மானங்களில் அவள் தன்னை அலங்கரிக்க முடியும்?

1. 7 2. 12 3. 8


14. நான்காக மடிக்கப்பட்ட சதுர வடிவக் கடதாசியில், படத்தில் காட்டியவாறு ஒருபகுதி வெட்டி அகற்றப்பட்டது. கடதாசியை விரிக்கும்போது தோன்றும் தோற்றம் எது?




15. தரப்பட்டவற்றுள் எப்பொருள் மேலிருந்து பார்க்கும்போது முதலாவது உருப் போலத் தோற்றமளிக்கும்?




16. அருகிலுள்ள உருவில் ? அடையாளம் இடப்பட்ட அமைப்புக்குப் பொருத்தமான உருவைத் தரப்பட்டவற்றில் இருந்து தெரிக.






17. சதுரக்கூம்பகம் ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்ட எதனைக்கொண்டு இக்கூம்பகத்தை ஆக்க முடியாது?




18. அருகே உள்ள ஆங்கிலச்சொல்லைக் கண்ணாடியில் பார்க்கும்போது தோன்றும் தோற்றம் எது?




19. அருகில் உள்ள கடிகாரம் மெக்சிக்கோவின் மாலைநேரத்தைக் காட்டுகிறது. மெக்சிக்கோ நேரம் இலங்கை நேரத்திலும் 15 மணித்தியாலம் பின்னதாக உள்ளது. இக்கடிகாரம் மெக்சிக்கோவில் இதே நேரத்தைக் காட்டும்போது இலங்கை நேரம் பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?
1. மறுநாள் அதிகாலை 2.00 மணி
2. அதேநாள் அதிகாலை 2.00 மணி
3. அதேநாள் அதிகாலை 5.00 மணி







20. மார்ச் மாதம் முதலாம் வாரத்தில் அஞ்சலகத்தில் ரூபா 200 ஐச் செலுத்திச் சேமிப்புப் புத்தகத்தைப் பெற்றவர் அடுத்தவாரம் முதல் ஒவ்வொரு வாரமும் ரூபா 15 ஐ வைப்பில் இட்டால் எத்தனையாம் வார முடிவில் அவர் கணக்கில் ரூபா 500 மீதியாக இருக்கும்?
1. 21 வாரம் 2. 20 வாரம் 3. 31 வாரம்

21. கீர்த்திகாவின் வீட்டிலிருந்து மேற்கே 50m தொலைவில் சந்தை அமைந்துள்ளது. அவளின் வீட்டிலிருந்து வடக்கே 80m தொலைவில் பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலையிலிருந்து அஞ்சல் அலுவலகம் 50m தொலைவில் மேற்கே உள்ளது. சந்தைக்கு வடக்கே 20m தொலைவில் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்திலிருந்து அஞ்சல் அலுவலகத்தின் அமைவிடம் யாது?
1. 60m தெற்கு 2. 80m வடக்கு 3. 60m வடக்கு

22. சிறிய பெட்டி ஒன்றில் 6 பந்துகள் படத்தில் காட்டியபடி அடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான 24 சிறிய பெட்டிகள் பெரிய பெட்டி ஒன்றினுள் இடப்பட்டுப் பொதி செய்யப்படுகின்றன. 20 பெரிய பெட்டிகளில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது?
1. 2080 2. 4800 3. 2880




⇨ அடுத்துவரும் இரு வினாக்களிலும் தரப்பட்ட உருக்களில் வித்தியாசமானதைத் தெரிக.

23. 1

2

3



24. 1


2

3


25. பானுகோபன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் தமிழ்மொழி மாணவர்களில் முதலாவது மாணவனாகச் சித்தி அடைந்தான் என வானொலிச் செய்தி கூறியது. மறுநாள் காலையில் பின்வருவனவற்றுள் எது நடைபெறும் சாத்தியம் மிகக் குறைவாக இருக்கும்?
1. செய்திப் பத்திரிகையில் அவனது படம் காணப்படுதல்.
2. காலைக்கூட்டத்தில் அதிபர் அவனை அழைத்துப் பாராட்டுதல்.
3. கனடாவில் உள்ள மாமாவின் பரிசுப்பொதி கிடைத்தல்.

26. "விளையும் பயிரை முளையிலேயே தெரியும்" என்ற பழமொழிக்குச் சான்றாக உள்ள நிகழ்வு எது?
1. செழிப்பான நாற்றிலிருந்து தென்னம்பிள்ளை வளர்ந்த பின் அதிக தேங்காய்கள் காய்த்தது.
2. பாடசாலையில் எல்லாச் செயற்பாடுகளிலும் முதன்மை மாணவனாகத் திகழ்ந்த சாரங்கன் பிற்காலத்தில் விஞ்ஞானியாகத் திகழ்ந்தான்.
3. கன்றாக இருக்கும்போது சுறுசுறுப்பாக ஓடித் திரிந்த மாட்டுக் கன்றுகள் பிற்காலத்தில் மாட்டுவண்டிச் சவாரியில் முதலிடம் பெற்றன.

27. நூலகம், பாடநூல், கதைப்புத்தகம், கணிதச் செயல்நூல் ஆகியவற்றைக் காட்டும் உரு எது?
1

2


3


⇨ அடுத்த இரு வினாக்களிலும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தவறானதைத் தெரிவு செய்க.

28. 1. இலங்கையின் மத்திய பகுதி மலைநாடு ஆகும். அங்கு தேயிலை பயிரிடப்படுகிறது.
2. பல்லி ஒரு ஊனுண்ணி. அது பூச்சிகளைப் பிடித்து மென்று உண்ணுகிறது.
3. வர்ணங்கள் சிலவற்றைக் கலந்து புதிய வர்ணத்தைப் பெறலாம். மஞ்சள் வர்ணத்துடன் நீல வர்ணத்தைக் கலந்து பச்சை வர்ணம் பெறலாம்.

29. 1. மலையில் அருவிகள் உருவாகின்றன. பல அருவிகள் ஒன்று சேர்ந்து நதி ஆகின்றது.
2. மாடு, புலி என்பன நான்கு பாதங்களால் நடக்கின்றன. எனவே, அவை மிருகங்கள் என அழைக்கப்படுகின்றன.
3. வௌவால் பறக்கக் கூடியது. எனவே, அது ஒரு பறவை ஆகும்.



30. அருகிலுள்ள படத்தில் காட்டியவாறு யானையும் மனிதனைப்போல கதிரையில் இருக்க முடியும். ஆனால், மாட்டினால் இவ்வாறு இருக்க முடியாது. இதற்குக் காரணம்,
1. யானை மனிதனைப்போல கால்களைப் பின்னோக்கி மடிக்கக் கூடியது.
2. மாடு பருமனில் கூடியது. யானை பருமனில் குறைந்தது.
3. யானைக்குத் தும்பிக்கை உண்டு, மாட்டுக்குத் தும்பிக்கை இல்லை.





31. மதுமதியின் பிறந்த தினம் ஆகஸ்ட் 6ம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அடுத்த வியாழக்கிழமை அவளது அண்ணனின் பிறந்த தினமாகும். அண்ணனின் பிறந்த திகதி யாது?
1. ஆகஸ்ட் 12ம் திகதி 2. ஆகஸ்ட் 14ம் திகதி 3. ஆகஸ்ட் 10ம் திகதி

32. பாம்பினால் கடியுண்ட மதன் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் ஏற்பட்ட வீதிவிபத்தில் படுகாயம் அடைந்தான். இந்நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி என்ன?
1. சட்டியில் இருந்து நெருப்பில் விழுந்தாற்போல
2. பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தாற்போல
3. சாண் ஏற முழம் சறுக்கினாற் போல

33. சிங்கம், பருந்து ஆகியன பின்வரும் குறியீடுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன.


சிங்கம்  பருந்து 

இங்கே கங்காரு என்ற சொல்லின் குறியீடு எதுவாக இருக்கலாம்?

1.  2.  3. 

34. △ + △ + △ = ○
△ x △ = □
□ + 3 = 7
△ + □ + ○ இன் பெறுமதி யாது?
1. 14 2. 12 3. 15


35. இங்கு 6 உருக்கள் உள்ளன. மேற்படி உருக்களில் மூன்றைப் பயன்படுத்தி அருகில் உள்ள உரு ஆக்கப்பட்டுள்ளது. ஆக்கப்பயன்படுத்தப்பட்ட உருக்கள் எவை?






1. A B C 2. D E F 3. C B F

36. அருகே உள்ள கோபுரத்தை அமைக்கத் தேவையான சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?




........................................................................................................................................

37. கிழக்கு மாகாணத்திலுள்ள நான்கு நகரங்களை இணைக்கும் பெருந்தெருவின் படம் அருகில் காட்டப்பட்டுள்ளது. கீழே உள்ள அட்டவணை நகரங்களுக்கிடையிலான தூரத்தைக் km இல் காட்டுகிறது. அட்டவணையில்? குறியிட்ட கட்டத்தில் வரவேண்டிய தூரம் யாது?

........................................................................................
........................................................................................

| | கல்முனை | மட்டக்களப்பு | திருகோணமலை |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | | | 130 |
| கல்முனை | | 40 | 170 |
| பொத்துவில் | 80 | 120 | ? |




➪ தரப்பட்ட பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

காடும் வயலும் இந்நாளில்
கண்டபடிக்கு அழிவதுடன்
கூடும் ..........A...... கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்
நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகின்ற நல் மரங்கள்
இல்லை என்று ஆவதனால்
எங்கும் பசுமை அழிகிறதாம்

கோடிக்கணக்கில் சாலைகளில்
குதித்துப் ..........B...... ஊர்திகளால்
ஓடிப் பரவும் நற்காற்று
உலகில் மாறி வருகிறதாம்
சுற்றுச் சூழல் எப்பொழுதும்
தூய்மையாக ஆனால் தான்
குற்றம் குறைகள் இல்லாமல்
கூடி வாழ வழி செய்யும்

38. நல்ல காற்றை நமக்குத் தருவது எது?

........................................................................................................................................

39. A என்ற வெற்றிடத்தில் வரக்கூடிய சொல்லை எழுதுக.

........................................................................................................................................

40. B என்ற வெற்றிடத்தில் வரக்கூடிய சொல்லை எழுதுக.

........................................................................................................................................



# அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சினேகிதியே

## பொலிவான சருமம் வேண்டுமா?

எமது நாட்டின் தற்போது உள்ள அதிக வெப்பத்தின் விளைவால் பலர் சருமப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதிலும் அதிகமாக வெளியில் சுற்றுவதால் உடலில் வெப்பமானது அதிகரித்து, பல உடல் பிரச்சினைகளையும் உண்டாக்குகின்றன. சிலருக்கு தோல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது என்கின்றார் நம் அழகுக் கலை நிபுணரான தனு ரசாக்.

ஆகவே, இதிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள அந்தந்த காலநிலைக்கேற்ற வகையில் எம்மைப் பாதிக்காத முறையிலான சிகிச்சைகளையும், உணவுப் பழக்கவழக்கங்களையும், அழகு முறைகளையும் நாம் கையாளல் அவசியமானதாகும். அதற்கு எங்கும் செல்ல வேண்டாம், வீட்டில் தயிர் இருந்தாலேபோதும். ஏனென்றால், தயிருக்கு சருமம் மற்றும் உடலைக் குளிர்ச்சியடையச் செய்யும் தன்மை அதிகம் உள்ளது. மேலும் இது எளிதில் கிடைக் கக்கூடிய பொருள் என்பதால், இந்த பொருளைப் பயன்படுத்தி சருமத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

நீண்ட நேரம் வெயிலில் வேலைசெய்த பின்னர், வீட்டிற்கு வந்ததும், தயிரை வைத்து சருமத்தை சுத்தம் செய்ய வேண்டும். அதுவும் தயிரை முகத்தில் தடவி, 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவவேண்டும்.

சிலருக்கு வெயிலின் தாக்கத்தினால் முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்படும். குறிப்பாக எண்ணைப் பசையான சருமம் என்றால் முகத்தில் பருக்கள் அதிகம் ஏற்படும். கரும் புள்ளிகள் மற்றும் பருக்கள் மறைய பப்பாளிப் பழச்சாறை முகத்தில் தடவவும். எக்காரணம் கொண்டும் பருக்களை கிள்ளக்கூடாது. இதனால் பருக்கள் அதிகமாகும்.



தனு ரசாக்

வெயில் காலத்தில் நாக்கு மட்டுமல்ல தோல் வறட்சியும் ஏற்படும். இதற்கு பழச்சாறு, காய்கறிச் சாறு, சூப் அடிக்கடி சாப்பிடவும். அத்தோடு ஒருநாளைக்கு குறைந்தது 4 லீற்றர் நீராவது பருகுதல் அவசியம். இதனால் தோல் வறட்சி தடுக்கப்படும். உடம்புக்கு புத்துணர்ச்சி ஏற்படுவதோடு தோல் பளபளப்பாகவும் மாறும்.

உடம்பில் இருந்து அதிகமான அளவு வியர்வை வெளியேறுவதைத் தடுத்தால் வேர்க்குருவைக் கட்டுப்படுத்தலாம். அதிகமாக வியர்க்கும்போது குளித்தால் உடலுக்கு நல்லதல்ல. வியர்வை நின்ற பிறகே குளிக்க வேண்டும். அதிகளவு சோப்புகளையும் வெயில்காலத்தில் பயன்படுத்த வேண்டாம். அதிகமாக வியர்க்கும்போது பவுடர் பூச வேண்டாம். நன்றாகக் கழுவி துடைத்த பிறகே பவுடரை பூச வேண்டும்.

இவ்வாறு எமது வெளிச்சருமத்தை மட்டுமல்லாது எமது உடலின் உள்ளேயும் நாம் சிறப்பாக கவனித்தாலே இவ் வெயில் காலத்தின் பாதிப்புகளில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம்.

எஸ்.பிரியதர்ஷினி

# சமையல் டிப்ஸ்கள்

- ரவா, மைதா உள்ள டின்களில் பூச்சி, புழுக்கள் வராமல் இருப்பதற்கு கொஞ்சம் வசம்பை தட்டிப் போட்டால் பூச்சி, புழுக்கள் வராது.
- சப்பாத்திக்கு மாவு பிசைவதற்கு முன்னால் கையில் சிறிதளவு உப்பைத் தடவிக் கொண்டால் கையில் சப்பாத்தி மாவு ஒட்டாது.
- தயிர் நீண்ட நேரம் புளிக்காமல் இருக்க இஞ்சியின் தோலை சீவி விட்டு கொஞ்சம் இடித்து தயிரில் போட்டால் புளிக்கவே புளிக்காது.
- உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.
- காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்கக்கூடாது. ஏனென்றால் காய்கறிகளில் உள்ள விற்றமின்கள் போய்விடும். அதில் உள்ள மணமும் சுவையும் போய்விடும்.
- அரிசி மற்றும் காய்கறிகள் கழுவிய தண்ணீரை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் செழிப்பாக இருக்கும்.
- தோசை சுடும்போது தோசைக்கல்லில் மாவு ஒட்டிக் கொண்டு தோசை வராமல் இருந்தால் அதற்கு கொஞ்சம் புளியை ஒரு வெள்ளைத்துணியில் கட்டி, அதை எண்ணெய்யில் தொட்டு கல்லில் தேய்த்துவிட்டு தோசை சுட்டால் நன்றாக வரும்.
- வெயில் காலத்தில் பெருங்காயம் கட்டியாகி விடும். அப்படி ஆகாமலிருக்க பச்சை மிளகாயை காம்பு எடுக்காமல் பெருங்காய டப்பாவில் போட்டால் பஞ்சு போல் மிருதுவாக இருக்கும்.
- நெய் ப்ரெஷ்ஷாக இருப்பதற்கு அதோடு ஒரு வெல்லத்துண்டை போட்டு வைத்தால் ப்ரெஷ்ஷாக இருக்கும்.
- பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.
- சப்பாத்தி போடும்போது சப்பாத்தி போடும் கட்டையில் முதலில் உருண்டையாக போட்டு விட்டு பின்பு அதனை நாலாக மடித்து உருட்டி போட்டால் சப்பாத்தி மிருதுவாக இருக்கும்.



# ஹெனா ட்ரீட்மென்ட் (Hena Treatment)

Hena Treatment என்பது ஒயில் மசாஜினைத் தொடர்ந்து செய்துகொள்ளக்கூடிய ஒருவகை ட்ரீட்மென்ட் ஆகும். இவை இயற்கை பொருட்களைக் கொண்டு செய்யப்படுவதினால் முடிக்கு எந்தவொரு தீங்கினையும் ஏற்படுத்தாது. இந்த வகையான ட்ரீட்மென்ட்களை 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை செய்துகொள்ளலாம்.

இது உடலை உஷ்ணத்தில் இருந்து பாது காத்து இளநரை வராது தடுக்கின்றது.

Hena Treatment செய்துகொள்பவர்கள் முடியை ஸ்ரெய்ட்டிங், பெர்மிங், ரீபொன்டிங் செய்து கொள்ளமுடியாது.

**தேவையான பொருட்கள்:**

ஹெனா பவுடர் - 2
முட்டை (வெள்ளைக்கரு) - 2 மே.க
தயிர் அல்லது யோகட் - 2 மே.க
தேசிக்காய்ச்சாறு - 1/2 மே.க
விற்றமின் E - 2 வில்லைகள்

**செய்முறை:**

மேற்குறிப்பிட்ட பொருட்களை ஒன்றாகக் கலந்து கொஞ்சம் தேயிலைச் சாயம் இட்டு கெட்டியாகக் கலந்துகொள்ளவேண்டும். பின் தலை முழுவதும் பூசி 1 மணித்தியாலத்தின் பின் கழுவ வேண்டும்.

வறண்ட கூந்தலை உடையவர்கள் இதனை செய்துகொள்வதாயின் கூடிய கவனம் எடுத்தல் அவசியம். அத்தோடு தரமான ஷம்போ, கண்டிஷனர்களை உபயோகித்தல் வேண்டும்.



திருமதி.ராஜேஸ்வரி குமார்




படம்: சிங்கம் 2
இசை: தேவி ஸ்ரீ பிரசாத்
இயற்றியவர்: விவேகா
பாடியவர்கள்: ஜாவெட் அலி,
பிரியா ஹிமாஸ், சீமன்

உன் கண்ணுக்குளே கன்ன
வெச்சு என்ன சுடாத
உன் காக்கி சட்ட கொளரதான்
தூக்கி விடாத
அடி ஒன்னாம் கிளாஸு
பொண்ணப்போல ரொம்ப பண்ணாத
நா உன்னைத் தானே தேடி
வந்தேன் தள்ளி ஓடாத
ஹே பட்டாம்பூச்சி கிட்ட வந்து
வட்டமிட்டா பாத்து ரசி
கட்டம்கட்ட ஆசபடதே
ஹே டெட்டொல் ஊத்தி
சுத்தம் செஞ்சே
வெண்ணிலவா நின்னுகிட்டு
என்ன எங்கே ஏதோ செய்யாத
ஹே ஆயிரம் ஆசய வெச்சிருந்தும்
என்ன வாட்டுன
(உன் கண்ணுக்குளே (2)

நீ வெட்கத்துல சிரிச்சாலே
Western Music
வெறும் காலில் நடந்தாலே
Luck பூமிக்கு
நீ தூரத்தில இருந்தாலே
காய்ச்சல் மேனிக்கு
அருகே நீ வந்தாலே Energy Tonic

நா பரப்பான கம்பியூட்டரா
மாறிப்போனேனே
உன் கையி பட்டா Immediatea
Restart ஆவேனே
ஹே Strawberry Babya Robery
பண்ணப் பாக்குற
(உன் கண்ணுக்குளே...)

ஹே எக்கச்சக்க அழகோட
திரியும் சல்வாரே
உனக்காக வரலாண்டி
மூன்றாம் World Ware
அட அடடா உன்னுடைய நடிப்புக்கு
தரலாம் Oscare
நீ வைக்கும் ஐசில்
நா மறந்தேன் என் பேர
நீ மூக்கு மேல கோவப்பட்டா
கன்னம் சிவக்கும்
அதில் வானவில்லின் எல்லாம்
வரும் வண்ணம் இருக்கும்
பார்க்குற பார்வையில் பத்து கிலோ
என்ன கூட்டுற
(உன் கண்ணுக்குளே)



## வருத்தத்தில் கவுண்டமணி!

ரீ என்ட்ரியாக வாய்மை உட்பட சில படங்களில் நடித்து வருகிறார் கவுண்டமணி. ஆனால் ஜெய்ஹிந்த் படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கி நடித்து வரும் அர்ஜூன், முதல் பாகத்தில் நடித்த கொமெடியன் செந்திலை மட்டும் சேர்த்துக் கொண்டு கவுண்டமணியை தவிர்த்துவிட்டார். அவர் நடித்த வேடத்துக்கு, பிரம்மானந்தம் என்ற தெலுங்கு கொமெடியனை ஒப்பந்தம் செய்திருக்கிறார். இந்த செய்தியறிந்த கவுண்டமணி ''முதல் பாகத்தில் இனித்த என் நடிப்பு, இப்போது, அர்ஜூனுக்கு கசக்கிறது போலும்...'' என்று, தன் வருத்தத்தை, தன் பாணியிலேயே கிண்டலாகக் கூறியுள்ளார்.

## கதை சொல்லத் தெரியாத சுந்தர் சி



டைரக்டர் சுந்தர்.சி.,க்கு, ஹீரோக்களிடம் அமர்ந்து முழுக்கதையையும் சுவாரஸ்யமாக சொல்லத் தெரியாது. இதை, வெளிப்படையாக சொல்லும் அவர், அதன் காரணமாகவே முழுக் கதையையும் கேட்ட பிறகே, படங்களை ஒத்துக் கொண்டு நடிக்கும் விஜய் உள்ளிட்ட சில மேல்தட்டு ஹீரோக்களை, என்னால் அணுக முடியவில்லை... என்கிறார். இருப்பினும், ஒருவரியில் மட்டுமே கதையை கேட்டு, சுந்தர்.சி.,யின் அடுத்த படத்தில் நடிக்க, ஒத்துக்கொண்டுள்ளார் அஜீத்.

## உதயநிதி, சந்தானம் நடிக்கும் நண்பேண்டா



ஒரு கல் ஒரு கண்ணாடி படத்துக்கு நண்பேன்டா டைட்டில்தான் முதலில் பரிசீலனையில் இருந்தது. இப்போது அதே பெயரில் அதே உதயநிதி நடிக்க விரைவில் ஒரு படம் ஆரம்பமாகிறது.

எஸ்.ஆர். பிரபா கரன் இயக்கும் ''இது கதிர்வேலன் காதல்'' படத்தில் நடித்து வரும் உதயநிதி மீண்டும் அவரது இயக்கத்தில் ஒரு படம் நடிக்கிறார். அதற்கு முன் அவர் நடிக்கயிருக்கும் படம்தான் நண்பேன்டா.

உதயநிதியுடன் சந்தானமும் முக்கியமான வேடத்தில் நடிக்கிறார்.



## த்ரில்லர் படத்தில் ஜெய்

தயாநிதி அழகிரியின் மீகா எண்டர்டெயிண்ட் சார்பில் புதிய படமொன்று பிரமாண்டமாக உருவாக உள்ளது.

சித்தார்த்தின் நடிப்பில் உருவான உதயம் என்.எச்.4 மாபெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இப்படத்தை தயாரிக்கின்றார் தயாநிதி அழகிரி. இப்படத்தில் கோவா, மங்காத்தா, பிரியாணி போன்ற படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய சரவணராஜன் இயக்குநராக அறிமுகம் ஆகிறார்.

மேலும் இவர் சந்தோஷ் சுப்ரமணியம், யாருடா மகேஷ், திரு திரு துறு துறு போன்ற படங்களிலும் இணை இயக்குநராக பணியாற்றி உள்ளார். இப்படத்தில் ஜெய் கதாநாயகனாக நடிக்கிறார். நாயகி உட்பட மற்றக் கலைஞர்களுக்கான தெரிவு நடைபெற்று வருகிறது.

அனிருத்தின் இசையமைப்பில் நகைச்சுவை கலந்த த்ரில்லர் படமாக உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் ஆகஸ்ட் மாதம் தொடங்க உள்ளது.




## சிங்கம்
## பெற்றால் சிங்கம்

சிங்கம் 2 படம் ரிலீஸ் ஆனதையடுத்து பயங்கர உற்சாகத்தில் இருந்த சூர்யா சிங்கம் 2 அருமையான பொழுது போக்குப் படம் என்றும், இது வெற்றியடைந்தால் சிங்கம் 3 எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

சிங்கம் 2 படம் ஒரு முழுக்க முழுக்க கமர்ஷியல் படம். ரசிகர்களுக்கு இது மிகவும் பிடிக்கும் என்றே கருதுகிறோம்.

சிங்கம் 2 படத்தில் நிறைய புதுமைகள் உள்ளன. சந்தானம், ஹன்சிகா கேரக்டர்கள் புதிதாக சேர்க்கப்பட்டு உள்ளனர். வில்லன் கேரக்டர் கொடூரமாக இருக்கும். நிச்சயம் படம் வெற்றி பெறும். ரசிகர்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம்.



இந்தி படத்தில் விஜய்யை நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன. ஏற்கனவே ராவணன் படம் மூலம் விக்ரம், பிருதிவிராஜ் இந்தியில் பிரபலமானார்கள். தற்போது ராஞ்சனா படம் மூலம் தனுஷ் இந்திக்கு போய் உள்ளார். இப்படம் வெற்றிகரமாக ஓடுவதால் தனுசுக்கு மேலும் இந்திப்பட வாய்ப்புகள் குவிகின்றன. இந்தி திரையுலக மார்க்கெட்டும் ரசிகர்கள் வட்டாரமும் பெரிது என்பதால் இந்திப் படங்களுக்கு முன்னுரிமை கொடுக்க அவர் முடிவு செய்துள்ளார்.

தனுசை தொடர்ந்து பரத்துக்கும் இந்தி பட வாய்ப்பு வந்துள்ளது. இவர்களை தொடர்ந்து விஜய்யும் இந்திக்கு போகிறார். விஜய், அமலாபால் ஜோடியாக நடிக்கும் தலைவா படத்தை இந்தியில் ரீமேக் செய்கின்றனர். இதில் விஜய்யை நடிக்க வைக்க முடிவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சமந்தா, நயனின் கலவை தான் நஸ்ரியா: இயக்குநர் புகழாரம்



நயன்தாரா மற்றும் சமந்தாவின் கலவை தான் நஸ்ரியா நசிம் என இயக்குநர் சற்குணம் தெரிவித்துள்ளார்.

நேரம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் மலையாள அழகி நஸ்ரியா நசிம். முதல் படத்திலேயே நல்ல பெயர் எடுத்ததால், பட வாய்ப்புகள் அம்மணிக்கு வந்து குவிகின்றது. தற்போதைய நிலையில் ஜெய்யுடன் திருமணம் என்னும் நிக்காஹ், தனுசுடன் நய்யாண்டி போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

நய்யாண்டி படத்தின் படப்பிடிப்பு தற்போது கும்பகோணத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில் இரண்டு பாடல் காட்சிகள் இன்னும் படமாக்கப்படாமல் உள்ளதால், சுவிட்சர்லாந்து செல்ல சற்குணம் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் அவர், நயன்தாரா மற்றும் சமந்தாவின் கலவை தான் நஸ்ரியா என்றும், பெரிய ஆளாக வருவார் என்றும் தெரிவித்துள்ளார்.

## டோனி- ஷேவாக்காக சிவா- சந்தானம்!



சிவா, சந்தானம் நடித்துள்ள யாயா படம் கிரிக்கெட் சூதாட்டத்தை மையமாக வைத்து உருவாகியிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால், இது குறித்து சிவாவைக் கேட்டால், ''சகுனி படத்தில், ரஜினி - கமலாக, கார்த்தியும், சந்தானமும் நடித்தது போல், இப்படத்தில், ''டோனி - சேவாக்'' என்ற பெயர்களில், நானும் சந்தானமும் நடித்துள்ளோம். எங்கள் கேரக்டரின் பெயர் தான், அப்படி. ஆனால், கிரிக்கெட் விளையாட்டுக்கும் யாயா படத்தின் கதைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை...'' என்கிறார்.

## விஷால் இயக்கும் ஹொலிவுட் ரேஞ்ச் படம்!



அர்ஜூன் இயக்கி நடித்த, ஏழுமலை படத்தில், அவரிடம் உதவி இயக்குநராக வேலை செய்தவர் விஷால். ஆனால், எதிர்பாராத விதமாய் நடிகராகி விட்டார். இருப்பினும், எதிர்காலத்தில், தானும் அர்ஜூன் பாணியில், படம் இயக்கி நடிக்க வேண்டும் என்ற முடிவில் இருக்கிறார். அடுத்த ஆண்டே கூட, அது நடைமுறைக்கு வரலாம் என்று சொல்லும் விஷால், ''அப்படி, நான் படம் இயக்கினால், அது ஹொலிவுட்டுக்கு நிகரான படமாக இருக்கும்...'' என்கிறார்.

## ஜீவா இடத்தை பிடித்த விஜய் சேதுபதி



ஈ படத்தின் மூலம் ஜீவாவிற்கும், பேராண்மை மூலம் ஜெயம் ரவிக்கும் ஒரு புது அடையாளத்தை கொடுத்தவர் இயக்குநர் ஜனநாதன். இவருடைய பேராண்மை படத்திற்கு பிறகு இயக்கும் புதிய படத்திற்கு தூக்குத்தண்டனை என பெயரிடப்பட்டிருந்தது. இப்படத்திற்கு தற்போது புறம்போக்கு என தலைப்பு மாற்றப்பட்டுள்ளது.

இப்படத்தில் ஜெயம் ரவி-ஜீவா ஆகியோர் நடிக்க சம்மதித்தனர். ஆனால், ஜீவா அடுத்தடுத்து படங்களுக்கு கால்ஷீட் கொடுத்திருப்பதால் இப்படத்திற்காக அவர் கால்ஷீட் ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஜீவாவின் கதாபாத்திரத்திற்கு விஜய் சேதுபதியை நடிக்க அணுகியுள்ளனர். அவரும் இதற்கு ஒத்துக் கொண்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, நீண்ட நாட்களாகவே ஆரம்பிக்கப்படாமல் இருந்த இப்படத்தின் முதல்கட்ட வேலைகள் முடிந்து, விரைவில் ஷூட்டிங் செல்ல இருக்கிறார்கள்.



## பாடல்



படம்:- மழை
பாடியவர்:- சித்ரா, ரகீப் ஆலம், கல்பனா
இசை:- தேவி ஸ்ரீ பிரசாத்
பாடல்வரிகள்:- வைரமுத்து

ஆண்: சின்ன மேகமே சின்ன மேகமே
சேத்து வச்ச காச வீசு சின்ன மேகமே

குழு: சின்ன மேகமே சின்ன மேகமே
சேத்து வச்ச காச வீசு சின்ன மேகமே

ஆண்: நட்டதோட்டம் வாடிப்போச்சு
நான் குளிச்சு நாளுமாச்சு
மின்னல் வெட்டி கும்மி
கொட்டி கொட்டு மேகமே

குழு: சின்ன மேகமே சின்ன மேகமே
சேத்து வச்ச காச வீசு சின்ன மேகமே

பெண்: ம்..... ஆ.......... ஆ.........
ம்..... ஆ.......... ஆ.........
விண்ணோடு மேளச்சத்தம் என்ன
மண்ணோடு சின்னத் தூறல் என்ன
எங்கேதான் சென்றாயோ
இப்போது வந்தாயோ
சொல்லாமல் வந்தது போல்
நில்லாமல் போவாயோ
தப்பாமல் மீண்டும் சந்திப்பாயோ
நீ வரும்போது நான் மறைவேனா...
நீ வரும்போது நான் மறைவேனா...
தரிகிட தரிகிட தா

(விண்ணோடு...)

பெண்: கொள்ளை மழையே கொட்டி
விடுக பிள்ளை வயதே மறுபடி வருக
நிற்க வேண்டும் சிற்பமாக
தாவணி எல்லாம் தெப்பமாக
குடைகளுக்கெல்லாம் விடுமுறை விடுக
குழந்தை போலே என்னுடன்
நனைக கையில் மழையை ஏந்திக்கொள்க
கடவுள் தூவும் திரவப் பூவாக
நீ வரும்போது ஆ.. நான் மறைவேனா...
ஆஹா.... நீ வரும்போது ஆ .. நான்
மறைவேனா...
தரிகிட தரிகிட தா

(விண்ணோடு...)

பெண்: முத்து மழையே முத்து மழையே
மூக்கின் மேலே மூக்குத்தியாகு
வைர மழையே வைர மழையே
காதில் வந்து தோடுகள் போடு
உச்சி விழுந்து நெற்றியிலாடி
நெற்றி கடந்து நீள்வழியோடி
செண்பக மார்பில் சடுகுடுபாடி
அணுஅணு வெங்கிலும்
குடு குடு செய்தாயே
நீ வரும் போது ஆ.. நான் மறைவேனா...
ஏ.. ஏஹே..
நீ வரும்போது நான் மறைவேனா...
தரிகிட தரிகிட தா

(விண்ணோடு...)

சிறுவர் பகுதி

# வேட்டை நாய்!

வேட்டைக்காரன் ஒருவன் இரண்டு நாய்கள் வைத்திருந்தான். அவற்றில் ஒரு நாய் அவனுடன் வேட்டைக்குச் சென்று வரும். மற்றொரு நாய் அவனது வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கும். ஒரு நாயின் கடமை வேட்டையாடுதல்; இன்னொரு நாயின் கடமை வீட்டைக் காவல் காத்தல்.

வேட்டைக்காரன் வேட்டைக்குச் சென்று திரும்பியதும், வேட்டையில் கிடைத்தவற்றில் வீட்டு நாய்க்கே அப்போதுதான் வருத்தம் ஏற்பட்டது.

வருத்தம் கொண்ட வேட்டைநாய், வீட்டு நாயைப் பார்த்து, "வேட்டையாடுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா? நீ அந்தத் துன்பத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆனால், நான் வேட்டையில் சம்பாதித்தவற்றில் மட்டும் பெரும் பகுதியைப் பங்காகப் பெற்றுக் கொள்கிறாய். இது முறையா? இது நியாயமா? உனக்கே இது நல்லதாகத் தெரிகிறதா?" என்று வருத்தத்துடன் கேட்டது.

அதைக் கேட்ட வீட்டு நாய் மெல்லச் சிரித்துக் கொண்டே, "நண்பனே! அது என்னுடைய குற்றம் இல்லை.



அதிகமாகக் கொடுப்பது வழக்கம். வேட்டை நாய் நீண்ட நாள்வரை அதைப் பொருட்படுத்தாமல் இருந்தது.

ஒருநாள் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்ததும், வேட்டைக்காரன் வழக்கம்போல் செய்தான். அதைக் கண்ட வேட்டை நாய்க்கு

நீ என்மீது வருத்தப்படுவதில் பயனில்லை. இந்தக் குற்றம் நம் எஜமானனுடையது. அவர் எனக்கு வேட்டையாடச் சொல்லித்தரவில்லை. வேட்டையாடுவதில் என்னைப் பழக்கவில்லை. மற்றவர் சம்பாதித்த பொருளில் பங்கு பெறத்தான் சொல்லிக் கொடுத்துப் பழக்கியிருக்கிறார்!" என்று பதில் கூறியது.

அதைக் கேட்டதும், வேட்டை நாயினால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. இந்த அநியாயக்கார உலகத்தில் நியாயத்தை எதிர்பார்ப்பது தவறு என்பதை உணர்ந்து மௌனமாக இருந்தது.

## பந்து வீடு



கொலம்பியாவைச் சேர்ந்த டாம் அடிக் என்ற புதுமைத் தொழில்நுட்பக் கலைஞர், மரத்துக்கு மேல் பைபர் கிளாஸ் மூலம் பந்து போன்ற வீடு கட்டி விற்பனை செய்கிறார். இதன் விலை இரண்டு இலட்ச ரூபாய் என்கிறார்கள். பத்துக்குப் பத்து அடிகளே உள்ள இந்தப் பந்து வீட்டில் வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை, கழிவறை என எல்லா வசதிகளும் உண்டு. இவ்வீட்டில் டி.வி.பார்க்கலாம். ஹீட்டர் சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பந்து வீட்டில் ஒவ்வொரு முறை நடக்கும்போதும் இடம் மாறி உட்காரும்போதும் வீடு சுழன்று நீங்கள் நிற்பதற்கேற்ப உட்காருவதற்கேற்ப தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும். கதவைப் பூட்டிவிட்டால் பந்து வீட்டை யாரும் எதுவும் செய்ய முடியாது. அவ்வளவு பாதுகாப்பு.

பறவைகளின் கூடு மாதிரியுள்ள இந்தப் பந்துவீட்டை இயற்கையான சூழலில் வாழ விரும்புகிறவர்கள் அதிக ஆர்வத்துடன் வாங்கிக் குடியேறுகிறார்கள்.

## கழுகு



பறவை இனத்தில் கழுகுகள் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. 40 ஆவது வயதிலிருந்து பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

அலகுகள் பெரிதாக வளர்ந்து உணவினை உண்ண முடியாத நிலை ஏற்படும்.

கால் நகங்கள் நீளமாக வளர்ந்துவிடும்.

இறக்கைகள் அடர்த்தியாக வளர்ந்து பறக்க முடியாது சிரமப்படும்.

இப்படியொரு சூழ்நிலையில், பெரிய அலகுகளைப் பாறைகளில் தேய்த்து உடைத்தும், தேவையற்ற நகங்களைப் பிய்த்து எறிந்தும், அடர்ந்த இறக்கைகளை உரித்தும் தன்னைத்தானே சரிசெய்து கொள்கின்றன. யாரும் சொல்லிக் கொடுக்காமல், எந்தப் பயிற்சியும் இல்லாமல், பிறருடைய உதவியுமில்லாமல் போராடி வெற்றி பெற்று, மீண்டும் 30 ஆண்டுகள் வரை வாழ்கின்றன.

## அதிகம் பேசவேண்டாம்!

ஒவ்வொரு வார்த்தையையும் நாம் பேசும்போது நமது உடலில் எழுபத்து இரண்டு தசைகள் அசைந்து இயங்குகின்றன. அதனாலேயே அதிகம் பேச வேண்டாம் என்று பெரியவர்கள் நம்மைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

அதிகமான பேச்சு உடலின் தசைகளை பலவீனப்படுத்தி விடுகின்றது. உரிய நேரத்தில் உரிய பலத்தைக் காட்ட இயலாமல் போகிறது என்பது ஜப்பானியர்களின் கண்டுபிடிப்பு.

## இதயம் ஜாக்கிரதை!

நம்முடைய வாழ்நாளில் ஆறில் ஒரு பங்கு நேரம் நமது இதயம் இயங்காமல் நிற்கின்றது என்பது வியக்கத்தக்க உண்மை. நமது இதயம் எப்போதும் துடித்துக் கொண்டிருக்கிறது. அப்படித் துடிக்கும்போது, இரு துடிப்புகளுக்கு இடையே ஒரு வினாடியில் ஆறில் ஒரு பங்கு நேரம் இயக்கம் இன்றி நிற்கின்றது. லப்-டப் என்ற ஒலியுடன் இயங்கும் துடிப்புகளுக்கிடையே அசைவற்ற நேரத்தை மட்டும் கணக்கிட்டால் மொத்தத்தில் வாழ்நாளில் ஆறில் ஒரு பங்கு காலம் இதயத் துடிப்பு நிற்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

## தகவல்க் களஞ்சியம்

- உலகில் அதிக மருத்துவமனைகள் கொண்ட நாடு சீனா.
- சூரிய ஒளியில் 7 நிறங்கள் உள்ளன.
- செவ்வாய் கிரகத்தில் தொடர்ந்து 250 நாட்களுக்கு பகல் பொழுது நீடிக்கும்.
- குவைத்தில் வருமான வரி கிடையாது.
- உலகின் பெரிய தீவு கிரீன்லாந்து.
- சங்குகள் வலம்புரி, இடம்புரி என இரு வகைகளில் உள்ளன.

Colour: Cyan Magenta Black

## வினாத்தாள் - 02 1 மணித்தியாலம் 15 நிமிடம்

➪ தரப்பட்ட பந்தியை வாசிக்குக.

இப்போது எனக்கு நிம்மதியாக இருக்கிறது. இரவு பட்ட அவலம் போதும். பசும்புல் மேய வெளிக்கிட்டுப் பாதையைத் தவறவிட்டு காட்டினுள் சென்றுவிட்டேன். முட்புதர்கள் எனது உடலைக் கீறின. கொம்புகள் மரக்கிளையில் கொழுவித் தடுத்தன. ஆதவன் மறைந்ததும் இருள் கவ்வியது. சுற்றும் முற்றும் பார்த்தபின் பற்றை மறைவில் படுத்து உறங்கினேன். ஆந்தையின் அலறலும், ஆட்காட்டியின் எச்சரிக்கை ஒலியும் வனத்தின் நிசப்தத்தைக் கலைத்தன. சிறுத்தையின் உறுமல் அண்மையில் கேட்டது. மெதுவாக எட்டிப் பார்த்தேன். இருட்டில் இரு சிறிய தீக்கோளங்கள் அசைவதைக் கண்டேன். நெஞ்சு படபடவென அடித்தது. நல்லகாலம், சிறுத்தை வேறுபக்கம் சென்றுவிட்டது. எல்லாம் என் பேராசையினால் வந்த வினை ஆகும். எஜமான் தரும் வைக்கலையும் புண்ணாக்கையும் தின்றுவிட்டு நன்றிக்கடனாக எனது பாலைக் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கலாம். இப்போது தான் எனக்குப் புத்தி வந்தது.

1. மேற்படி பந்தியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   அ. மேற்படி அனுபவத்தைக் கூறிய விலங்கு எது? ..............................

   ஆ. இவ்விலங்கிற்கு எவ்வகைத் துன்பங்கள் ஏற்பட்டன? ..............................

   ..............................

   இ. காட்டின் நிசப்தத்தைக் கலைத்தவை எவை? ..............................

   ஈ. இருட்டில் தெரிந்த தீக்கோளங்கள் யாவை? ..............................

   உ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுக்குக.

   காடு .............................. அமைதி ..............................

   ஊ. பின்வருவனவற்றுக்கு உதாரணங்களைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுக்குக.

   இரட்டைக்கிளவி.............................. இணைமொழி ..............................

   எ. "வைக்கலையும் புண்ணாக்கையும்" இச்சொற்றொடரைத் திருத்தமான மொழியில் எழுதுக.

   ..............................

   ஏ. பந்தியில் கூறப்பட்ட நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி ஒன்று தருக.

   ..............................

2. அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமானதைத் தெரிந்து வெற்றிடத்தை நிரப்புக.

   அ. யானை .............................. விரும்பி உண்ணும். (விழாம்பழம், விளாம்பழம் )

   ஆ. குருவி குஞ்சுகளுக்கு .............................. தேடிச் சென்றது. (இரை , இறை)

3. பின்வரும் மரபுத் தொடருக்குரிய கருத்தை எழுதுக.

   அ. கை கொடுத்தல் ..............................

   ஆ. நாக்குப் புரளல் ..............................

4. பின்வரும் சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

   அ. தன்னலம் கருதாது தனது பொருட்களை மற்றவர்களுக்கு வழங்குவோன் - ..............................

   ஆ. நீண்டகாலம் மழையின்மையால் நீரற்ற அதிக வெப்பநிலையுள்ள காலநிலை - ..............................

5. பின்வரும் ஒருமை வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

   மாணவி விபத்தில் காயம் அடைந்தாள். ..............................

6. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.

   அளவுக்குமீறிய / அகழ்வினால் / கடல் / நிலத்தினுள் / புகும் / உள்ளது / ஆபத்து / சுண்ணக்கல் / நீர்

   ..............................

7. பின்வரும் வாக்கியங்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

   அ. இது ஒரு அழகான ரோஜாப்பூ - ..............................

   ஆ. உங்கள் அப்பா எங்கே? - ..............................

8. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

a. Last week we went to Kandy.

..........................................................................................................

b. Shall we have a cup of tea?

..........................................................................................................

9. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

அ. மகே தாத்தாகே நம குமார்

..........................................................................................................

ஆ. மே அம்ப கெடியக்

..........................................................................................................

⇨ 10 தொடக்கம் 28 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




10. அருகே மரஅட்டையின் படம் தரப்பட்டுள்ளது. இதன் உடல் துண்டுபட்டது. ஒரு துண்டில் காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1. 2 2. 4 3. 6 4. 8

11. தேசிய இலச்சினையில் நெற்கதிர் குறிக்கும் கருத்து யாது?
1. பூரணம் 2. உணவு உற்பத்தி 3. தன்னிறைவு 4. இயற்கை





12. யாப்பகுவா மலைக்குன்றில் காணப்படும் சிங்கச் சிற்பத்தின் படம் இங்கே காட்டப்பட்டுள்ளது. இப்படம் காணப்படும் தாள் நாணயத்தின் பெறுமதி என்ன?
1. ரூபா 10 2. ரூபா 210 3. ரூபா 50 4. ரூபா 100




13. அருகிலுள்ள இலங்கைப் படத்தில் களனி கங்கையைக் குறிக்கும் ஆங்கில எழுத்து எது?
1. A 2. B 3. C 4. D


14. தடித்த துணியில் விளிம்பைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்முறை பின்வருவனவற்றுள் எது?



15. தேநீர்மேசை, தொலைக்காட்சித்தாங்கி என்பவற்றின் கால்களில் படத்தில் காட்டியவாறு "கஸ்ரர்" (castor) சில்லுகள் தொடுக்கப்பட்டிருக்கும். இதற்குக் காரணம் அல்லாதது எது?
1. இலகுவில் தள்ளுவதற்கு
2. அதிக பாரத்தைத் தாங்குவதற்கு
3. தள்ளும்போது தரையை உரோஞ்சுவதைத் தடுக்க
4. தள்ளும்போது ஏற்படும் ஒலியைத் தவிர்க்க.

16. பின்வரும் மின்சுற்றுகளில் எதில் ஆளியை மூடும்போது மின்குமிழ் ஒளிரும்?





17. காய்கறித் தோட்டங்களில் பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டப்படும் தாவரம் எது?
1. சீனியாஸ் 2. செவ்வந்தி 3. கிளுவை 4. மல்லிகை

18. நிறக்கடதாசித் துண்டுகள் அல்லது நிறத் துணித்துண்டுகளை ஒட்டி ஆக்கப்படும் ஆக்கம் யாது?
1. ஒட்டுச் சித்திரம் 2. ஓரிகாமி 3. கொலாஜ் 4. முப்பரிமாண ஆக்கம்



19. அருகில் காட்டப்பட்ட மின்குமிழ் மின்சக்தியைச் சிக்கனமாகப்பாவிக்க உதவுகிறது. இதன் பெயர் என்ன?
1. CFS 2. ELF 3. FCL 4. CFL

20. பெருந்தெருக்களில் வாகனவிபத்து ஏற்படுவதற்குக் காரணமாய் அமையாதது எது?
1. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை 2. யானைகள் வீதியின் குறுக்கே வருதல்
3. வீதியில் எண்ணெய் கொட்டப்பட்டிருத்தல் 4. சமிக்ஞை விளக்கு ஒளிர்தல்.



21. அருகிலுள்ள குறியீடு குறிப்பது,
1. இரு கைகளால் தூக்கவும் 2. கைகளால் தொடாது தூக்கவும்.
3. உள்ளங்கையினால் மட்டும் தூக்கவும். 4. கவனமாகக் கையாளவும்.




22. கைகளைக் கழுவுவதில் 6 படி முறைகள் உண்டு. படத்தில் காட்டிய படிமுறையின் நோக்கம் யா
1. விரல் இடுக்குகளில் உள்ள அழுக்கை அகற்றல்
2. நகங்களிலும் விரல்நுனிகளிலும் உள்ள அழுக்கை அகற்றல்
3. உள்ளங்கைகளின் அழுக்கை அகற்றல்
4. மேற்கூறிய எல்லாம்.

23. தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 2010 உலகக்கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
1. நெதர்லாந்து 2. ஜேர்மனி 3. ஸ்பெயின் 4. தென்னாபிரிக்கா

24. இரவில் வாகனங்களை ஓட்டிச் செல்வோர் எதிரே வாகனங்கள் வரும்போது தங்கள் முகப்பு விளக்கின் ஒளிக் கற்றையைப் பதித்து (Dip பண்ணி) வாகனத்தை ஓட்ட வேண்டும். இதற்குக் காரணம்,

1. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த
2. ஒளியின் அளவைக் கட்டுப்படுத்த
3. எதிரே வரும் வாகன ஓட்டியின் கண்கள் கூசுவதைத் தடுக்க
4. எதிரே வரும் வாகன ஓட்டுநருக்கு மரியாதை தெரிவிக்க




25. நீர்ச்சில்லின் படம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இதன் சுழல் கதியை அதிகரிக்க என்ன செய்யலாம்?
   1. சில்லிலுள்ள தகடுகளை அதிகரிக்கச் செய்தல்
   2. நீர் விழும் உயரத்தை அதிகரித்தல்
   3. விழும் நீரின் அளவை அதிகரிக்கலாம்.
   4. மேற்கூறிய 3 முறைகளாலும்



26. பின்வருவனவற்றுள் எது கொத்துப்பூவிற்கு உதாரணமாக அமையும்?
   1. நித்தியகல்யாணி  2. மயிர்க்கொன்றை  3. சூரியகாந்தி  4. செவ்வரத்தை

27. லொறி ஒன்றில் எண்ணெய்ப் பீப்பாவைச் சாய்தளம் ஒன்றின் மூலம் தூக்கும் முறை காட்டப்பட்டுள்ளது. இவற்றில் எச்சந்தர்ப்பத்தில் இலகுவாகப் பீப்பாவைத் தூக்க முடியும்?





➪ கீழே இரு பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவை எவ்வகைப் பாடல் என எழுதுக.

28. கோண கோண மலையேறி
கோப்பிப்பழம் பறிக்கையிலே
ஒருபழம் தப்பிச்சுன்னு
உதைச்சானய்யா சின்னத்துரை
..........................................................................

29. கும்மியடி பெண்ணே கும்மியடி
குனிந்து வளைந்து கும்மியடி
..........................................................................


➪ கீழே சில பறவைகளின் பெயர்களும் அவற்றின் கால்களின் பயன்களும் தரப்பட்டுள்ளன. அருகிலுள்ள படங்களிலிருந்து அவற்றுக்குப் பொருத்தமானதைத் தெரிந்தெடுத்து அருகிலுள்ள புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.

30. நாரை - சேற்றில் நடத்தல் ....................................
31. புளுனி - மரக்கிளையைப் பற்றிப் பிடித்தல் ...........................................
32. வாத்து - நீரில் நீந்துதல் ............................................
33. கழுகு - இரையைப் பற்றிப் பிடித்தல் ..........................................





➪ சுற்றாடல் அவதானம் தொடர்பாக மாணவர் இருவர் வரைந்த படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் தவறான அவதானத்தைத் தரும் படத்தின் கீழ் X அடையாளமிடுக.

34. பந்து நீரில் மிதத்தல்




----------- -----------

35. வான் அவதானம்





----------- -----------

➪ குறித்த ஒரு வேலைத்தளத்தில் பயன்படுத்தப்படும் இரண்டு உபகரணங்களைப் படம் காட்டுகின்றது.

36. அவ்வுபகரணங்கள் காணப்படும் வேலைத்தளம் எது?
..........................................................................................

37. உபகரணம் A யின் பயன்பாடு என்ன?
..........................................................................................




➪ இரண்டு தாவரக் கிளைகளின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்துப் பொருத்தமான பெயரை எழுதுக.




38 ..................................................




39.......................................................

40. அருகில் தரப்பட்ட உருவின் சமச்சீரச்சுகளை வரைந்து காட்டுக.




41. அருகிலுள்ள டிஜிற்றல் கடிகாரம் காட்டும் நேரத்தை மணிக்கூட்டு முகத்தில் குறித்துக் காட்டுக.

11 : 15





42. 208 நூல்கள் எட்டு நூலகங்களுக்குச் சமனாக வழங்கப்பட்டால் ஒரு நூலகத்துக்கு வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை என்ன? ..........................................................................................

43. அருகிலுள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசமத்தில் எழுதுக.




.....................................................................................................

44. மேசைத்தராசில் 4 பந்துகள் வைக்கப்பட்டபோது காட்டியின் நிலையைப் படம் காட்டுகிறது.. ஒரு பந்தின் நிறை யாது?





.....................................................................................................

45. படத்தில் காட்டிய உருவின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது? ஒரு கட்டத்தின் பரப்பளவு 4cm ஆகும்.



.....................................................................

46. அருகில் தரப்பட்ட அளவுக்கேற்ப உருவின் சுற்றளவு யாது? அளவுகள் m இல்




.....................................................................................................

47. மோட்டார் சைக்கிளில் உள்ள தூரமானியின் வாசிப்பு பயணத்தின் முன்பும் பயணத்தின் பின்பும் இருந்த நிலைகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது. பயணத்தின் முழுத்தூரம் யாது? | 2 | 7 | 4 | 6 | 2 | | 2 | 7 | 8 | 2 | 2 |


.....................................................................................................

48. 2064 உடன் 340 ஐக் கூட்டுக. ...............................................

49. 2.0l நெல்லி இரசத்துடன் 5.5l நீர் சேர்க்கப்பட்டு குளிர்பானம் தயாரிக்கப்பட்டது. இது 100 குவளைகளில் சமமாக ஊற்றப்பட்டது. ஒரு குவளையிலுள்ள பானத்தின் கனவளவு எத்தனை மில்லி லீற்றர் ஆகும்?

.....................................................

50. அருகில் தரப்பட்ட உருவில் எத்தனை சதுரங்கள் உண்டு?



.....................................................................................................


51. தந்தையின் வயது மகளின் வயதிலும் மூன்று மடங்காகும். இருவரின் வயதின் கூட்டுத்தொகை 48ஆகும். தந்தையின் வயது யாது? .....................................................................................................

52. தபால் மூலம் பொதிகளை அனுப்ப பின்வருமாறு கட்டணம் அறவிடப்படுகிறது.

| | |
|---|---|
| நிலையான கட்டணம். | ரூபா 20/- |
| முதல் 250g நிறைக்கு | ரூபா 50/- |
| மேலதிக ஒவ்வொரு 500g இற்கு அல்லது அதன் பகுதிக்கு | ரூபா 50/- |

375 g நிறையுடைய பொதியை தபால் மூலம் அனுப்ப எவ்வளவு செலவாகும்? ........................................

53. 48 மாணவர்கள் கொண்ட தரம் 5 மாணவர்கள் பாடசாலைக்குப் பயணம் செய்யும் முறை தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு அருகிலுள்ள வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது.




1. சைக்கிள் மூலம் பயணம் செய்வோரின் எண்ணிக்கை யாது? ...............................................
2. பேருந்து மூலமும், நடந்தும் பயணம் செய்வோரின் மொத்த எண்ணிக்கை யாது? .............

54. அரைக்கும் ஆலை ஒன்றில் காணப்பட்ட அறிவித்தல் வருமாறு,

| | 1kg க்குக் கட்டணம் |
|---|---|
| அ. நெல் குற்றல் | ரூபா 4.00 |
| ஆ. ஈரஅரிசி அரைத்தல் | ரூபா 12.00 |
| இ. மிளகாய் அரைத்தல் | ரூபா 15.00 |

கீதா, மாலா, பாமா ஆகியோர் இங்கு அரைப்பித்த பொருள்கள் வேலை தொடர்பான தகவல் வருமாறு,

| | கீதா | பாமா | மாலா |
|---|---|---|---|
| நெல் குற்றல் kgல் | 10 | 10 | 10 |
| ஈரஅரிசி அரைத்தல் kgல் | 03 | 04 | 05 |
| மிளகாய் அரைத்தல் kgல் | 03 | 05 | 04 |

இதன்படி ஆகக் கூடிய கட்டணம் செலுத்தியவர் யார்? எவ்வளவு கட்டணம் செலுத்தினார்? ..........................................

55. பின்வரும் பந்தியை வாசிக்குக.

அன்று பாடசாலை நாள். கண்ணன் பாடசாலை மணி அடித்ததும் வீடு நோக்கிச் சென்றான். வானம் இருண்டிருந்தது. திடீரெனப் பலத்த இடியுடனும் மின்னலுடனும் மழை கொட்டத் தொடங்கியது. கண்ணன் சுற்றும் முற்றும் பார்த்தான் ஒதுங்குவதற்கு ஓரிடமும் தென்படவில்லை. புத்தகப்பையைத் தலையில் வைத்தபடி ஓடத் தொடங்கினான். . . .

இதனைத் தொடர்ந்து நடந்திருக்கக் கூடிய சம்பவத்தை விபரித்து 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்குக் குறையாத பொருத்தமான எழுவாய், பயனிலை உடைய பூரண வாக்கியமாக இருத்தல் வேண்டும்.

1. .....................................................................................................
2. .....................................................................................................
3. .....................................................................................................
4. .....................................................................................................
5. .....................................................................................................
6. .....................................................................................................

# சுகாதாரத்திற்கு கேடாக இருக்கும் நானுஓயா பொதுமலசல கூடம்

## அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?



நுவரெலியா பிரதேசத்தின் முக்கிய நகரங்களில் ஒன்று நானுஓயா!. பாடசாலைகள், வைத்தியசாலை, ரயில் நிலையம், கோயில், பொலிஸ் நிலையம் என பல்வேறு முக்கிய ஸ்தலங்களைக் கொண்ட இந்த நகரத்திற்கு அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள், மாணவர்கள், வெளிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பல்வேறு தரப்பினரும் வந்துபோகின்றனர். எனினும் இந்நகரத்தில் பொதுமக்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் பொது மலசலகூடம் பற்றி சொல்ல வார்த்தைகளில்லை. அந்தளவிற்கு மோசமான நிலையில் இது உள்ளது.

நகரத்தில் கடைத்தெருக்களின் பிற்பகுதியில் அமைந்துள்ள இந்த பொது மலசலகூடத்தை அண்டிய பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புகள், கிறிஸ்தவ ஆலயம், எடின்பரோர் தோட்ட மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லும் குறுக்குப் பாதை என்பவை அமைந்துள்ளன.

இந்த மலசலகூடம் சுமார் பத்து வருடங்களுக்கு முன் ஒரு தடவை திருத்தி அமைக்கப்பட்டது. அதன்பின் அதனை துப்புரவு செய்யவோ, பராமரிக்கவோ எவரும் இல்லை. தற்பொழுது டெங்கு



நோய்க்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், உடைந்து சின்னாபின்னமான நிலையில் சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படும் இந்த மலசலகூடத்தை சீர்செய்ய கண்காணிக்க நுவரெலியா பிரதேசசபை அதிகாரிகள் முன்வராதது பெரும் கவலைக்குரியதாகும்.

இதுபற்றி அப்பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.எலிஸ்டன் என்பவர் கருத்து தெரிவிக்கையில், "எங்கள் கடைக்கு முன் கொஞ்சம் குப்பை கிடந்தாலும் டெங்கு நோய் வரும் என அபராதம் விதிக்கின்றார்கள். எனினும் சுகாதாரத்திற்கு பெரும் கேடாக இருக்கும் இந்த மலசலகூடம் எவர் கண்ணுக்கும் தென்படாதது ஆச்சரியமே" எனக் கூறினார்.

மலசலகூடத்திற்கு அருகிலிருந்து இன்னல்களை அனுபவிப்பவர்களில் ஒருவரான ஆர்.திருச்செல்வம் என்பவர் கூறுகையில்,

உதயசூரியன் பத்திரிகை மூலம் எத்தனையோ இடங்களில் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாகக் கூறினால் நானுஓயா நகரத்தில் ஒரு பஸ்தரிப்பிடம் இல்லாததை உதயசூரியன் மூலம் வெளிக்கொணரப்பட்டு தற்பொழுது புதிய பஸ் தரிப்பிடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுபோல இப் பிரச்சினையும் தீர்த்துவைக்கப்படும் என்ற அவாவிலேயே கூறுகின்றேன். இந்த மலசலகூட துர்நாற்றத்தையே என்னுடைய குழந்தைகள் சுவாசிகின்றனர். இது பெரும் பாதிப்பாக உள்ளது. இந்த மலசலகூடம் வழியாகவே நாங்கள் நகரத்திற்கு வந்துசெல்லுகின்றோம். இந்த பாதையிலும் வாகனங்களைக் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்கள். இதனால், நடைபாதையுமின்றி கழிவுகள் செல்லும் கானில் இறங்கிச் செல்ல வேண்டியுமுள்ளது எனக் கூறினார். எனவே, நுவரெலியா பிரதேசசபை அதிகாரிகள் இப்பிரச்சினையை அறிந்து தீர்த்து வைப்பார்கள் என இப்பிரதேச மக்கள் மிகவும் அவாவாக உள்ளனர். பொறுத்திருந்து பார்ப்போம் பிரச்சினை தீர்க்கப்படுமா என்று.

**டி.சந்ரு, நானுஓயா**

# பல்லைப் பிடுங்கச் சென்றவருக்கு நடந்த விபரீதம்



இலங்கையில் இலவச மருத்துவ சேவை வழங்கப்படுகின்ற போதிலும் எம்மவர்களில் சிலர் நேர மீதம், சௌகரியம், கௌரவம்(?) எனும் காரணங்களைக் கூறி தனியார் மருத்துவ சேவையை நாடுவது வழமை. அந்த வகையில் தமது சௌகரியத்துக்குகாக தனியார் வைத்தியசேவையை நாடிய ஒருவருக்கு நடந்த விபரீதத்தை இங்கு தருகின்றோம்.

குருணாகலை ரீதிகம மதிடியாவைவையச் சேர்ந்த அமரசிங்க என்பவருக்கு கடைவாயில் ஒரு பல் பூச்சியரித்திருந்தது. அந்த பல்லைப் பிடுங்கிவிடுவதுதான் இதற்குத் தீர்வென முடிவெடுத்த அமரசிங்க குருணாகலை நகரிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்று அந்தப் பல்லைப் பிடுங்கிவிட்டு வந்தார். பூச்சிப்பல்லைப் பிடுங்கியதும் வலி குறைந்துவிடும் என நினைத்த அமரசிங்கவிற்கு பல்வலி குறையவே இல்லை. வாயை அசைக்கமுடியாத அளவிற்கு வலி ஏற்பட்டது. மீண்டும் வைத்தியரை நாடிய அமரசிங்க "தன்னால் வாயை அசைக்கக்கூட முடியவில்லை மிகவும் வருத்தமாக இருக்கின்றது" எனக் கூறியுள்ளார்.

அவ் வைத்தியர் மீண்டும் X-ray எடுத்துப் பார்த்துவிட்டு பற் தாடையில் சிறிய பாதிப்பு இருக்கின்றது அவரை கண்டி அல்லது கொழும்பிற்கு கொண்டு செல்லுங்கள் என சூசகமாகக் கூறி அனுப்பி வைத்துள்ளார்.

என்ன நடந்தது எனத் தெரியாத அமரசிங்கவின் குடும்பம் உடனடியாக கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அமரசிங்கவை அனுமதித்தது. அமரசிங்கவை பரிசோதித்த வைத்தியர் உங்களுக்கு வருத்தம் கொடுத்த பூச்சி பல்லுக்கு பதிலாக பக்கத்திலிருந்த நல்ல பல்லை கழற்றியுள்ளனர். இதனால் உங்கள் பற்தாடை உடைந்துள்ளது. தாடையை சரிசெய்வதானால் அவ்விடத்திற்கு ஆபரேஷன் மூலம் உலோகத்தகடு (Plate) வைக்கவேண்டும். அதற்கு 1-1/2 இலட்சம் ரூபாய் செலவாகும் எனும் பேரிடியை இறக்கியுள்ளார்.

வேறு வழியில்லாமல் அமரசிங்க தம்பதியினர் ஆபரேஷனுக்கு சம்மதித்தனர். 3 மணிநேர ஆபரேஷனின் பின் அமரசிங்க சுகமாக இருப்பதாகவும் இன்னும் கதைக்க, உணவு உண்ண சிரமப்படுவதாகவும் அவருடைய மனைவி தெரிவிக்கின்றார்.

பூச்சிப்பல்லை கழற்றச் சென்ற நபர் இரண்டு பற்களை இழந்துள்ளதுடன் 1-1/2 இலட்சம் ரூபாவை பறிகொடுத்த பரிதாபம் இது. போலி டாக்டர்கள் தொடர்பாக மக்களிடம் அவதானம் தேவை எனும் செய்தியையும் இது சொல்லிச் செல்கின்றது.

அத்தனியார் வைத்தியசாலை வைத்தியருக்கு எதிராக குருணாகலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. போலி டாக்டர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் கூடிய அவதானம் தேவை.

எம்.தாசன்

# நான் உங்கள் நண்பி





**அலை** வானொலி அறிவிப்பாளரும் டான் தொலைக்காட்சி தொகுப்பாளினியுமான செல்வராஜா அகல்யா இந்த வார பேஸ்புக் பகுதியில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்...

## அலை fm செல்வராஜா அகல்யா

நண்பனாகப் பழகும் தந்தை, உறவுகளில் உயர்ந்தது என் தாய், செல்லமாக சண்டையிட என் இரு சகோதரிகள், அடிக்கடி என்னை சீண்டிப் பார்க்கும் என் அருமைத் தம்பி இதுவே என்னை எப்பொழுதும் அழகாக்கும் என் குடும்பம்.

மலையகத்தின் நுவரெலியா த.ம.வி.யில் என் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தேன் தொடர்ச்சியாக அட்டன் புனித கப்ரியல் பெண்கள் கல்லூரியில் கற்றேன்.

சிற்றலையாக இருந்த என் ஊடகத்துறை ஆர்வத்தை பேரலையாக மாற்றியமைத்தது. வெள்ளவத்தையில் அமைந்திருக்கும் ஊடகப் பயிற்சிக் கூடம். அங்கு எனக்கு பல ஊடகத்துறை அனுபவம் பெற வாய்ப்பாக இருந்தது. பின் இணையத்தள வானொலி அக்னி வானொலியியில் அறிவிப்பாளராக வந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தினேன். தொடர்ந்து ஜெயிக்கலாம் வாங்க என்ற நிகழ்ச்சியில் நடனமாட வாய்ப்புக் கிட்டியது. அதைத் தொடர்ந்து ஒரு குறு நாடகம். இவற்றுக்கு பகவத் சிங் உதவினார். அவரே டான் தொலைக்காட்சியில் இணைய வாய்ப்பை ஏற்படுத்தினார். பின் அலை எப்.எம்.மில் அறிவிப்பாளராகவும் வாய்ப்புக் கிடைத்தது.

**அலை வானொலியில் நீங்கள் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சிகள் பற்றி...** அலை ஸ்பெஷல் எனும் அருமையான நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறேன். உங்களுடைய உறவுகளில் நண்பர்களில் ஒருவர் எப்படி பேசிப் பழகுவாரோ அப்படித்தான் நாங்களும் நேயர்களோடு பழகுகிறோம். அதுவே அலையின் ஸ்பெஷல் என்றாலும், எந்த நிகழ்ச்சி என்றாலும் அதை அன்பான ரசிர்களை கவரும் வகையில் தொகுத்து வழங்குவேன். அதுதான் என் ஷ்பெஷல்.



**உங்களைக் கவர்ந்த அறிவிப்பாளர் யார்?** இந்தியாவின் விஜய் தொலைக்காட்சியில் கோபிநாத்தை ரொம்பப் பிடிக்கும். அவரது பரந்த அறிவு ஆச்சரியப்படுத்தும். அதேபோல இலங்கையில் இராஜேஸ்வரி சண்முகம் அம்மாவின் குரல் ரொம்பப் பிடிக்கும்.

**அடிக்கடி நீங்கள் முணுமுணுக்கும் பாடல்?** குத்துப்பாடல்கள் தான் அதிகம் பிடிக்கும். அடிக்கடி முணுமுணுக்கும் பாடல்... ஒரு நதி ஒரு பௌர்ணமி..

**பொழுதுபோக்கு?** நேரம் கிடைக்கும் போது பேஸ்புக் பார்க்கப்போவது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பது.

**அறிவிப்புத் தவிர்ந்த ஏனைய திறமைகள் என்ன?** குரல் மாற்றிப்பேசுவது, படம் வரைவது, தையல், மனக்குழப்பம், சந்தோஷம் இவை இரண்டிற்கும் ஏற்ற சில கவி வரிகள் எழுதுவது.

**சந்திக்க விரும்பும் நபர் யார்?** என்னைப் படைத்த கடவுளை

**பிளஸ், மைனஸ்?** பிளஸ்:- அதிக பாசம், மைனஸ் :- அதிக கோபம்

**படித்ததில் பிடித்தது-** பலவற்றை தவறாக புரிந்துகொள்வதை விட, சிலவற்றை நன்றாக புரிந்துகொண்டால் போதும்.

**நேயர்களுக்கு சொல்ல விரும்புவது?** 24 மணிநேரத்திலும் அருமையான பாடல்களோடும் சுவாரஷ்யமான பேச்சோடும் இணைந்திருப்பது தானே உங்கள் விருப்பம். அந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வது எங்கள் அலை வானொலி..... எப்போதும் எங்களுடன் இணைந்திருங்கள்....

சந்திப்பு: எஸ்.ரோஷன்

# இலங்கையின் நோக்கத்தை இந்தியா புரிந்துகொள்ளுமா?

**8** ஜூலை 1985, பூட்டான் நாட்டின் தலைநகர் திம்பு. அங்கு இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களான தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், புளொட் ஆகியவற்றின் தலைவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பேச்சுக்களை நடத்துகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது தம்பியாரான சட்டநிபுணர் ஹெக்டர் ஜெயவர்த்தனா தலைமையில் அரசுத் தூதுக்குழுவை அனுப்புகின்றார். தமிழர் தரப்புக்கும் இலங்கை அரசாங்கத் தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடக்கிறது. தமிழக தரப்பு பேச்சுவார்த்தை மேசையில் அறிக்கை ஒன்றை முன்வைக்கிறது. தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வு நான்கு கோட்பாடுகளின் அடிப்படையிலேயே காணப்படவேண்டும் என்பது எமது அபிப்பிராயம். அந்த நான்கு கோட்பாடுகளும் வருமாறு:-

01. இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

02. இலங்கையில் தமிழ் மக்களுக்கென வரலாற்று ரீதியான தாயகம் இருக்கின்றது என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

03. இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.


04. இலங்கையில் வாழும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளும் குடியுரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்த நான்கும் இலங்கை தமிழரின் அரசியல் வரலாற்றில் திம்புக் கோட்பாடுகள் என்று இடம்பெற்றுள்ளன. இலங்கை அரசாங்கத் தூது க்குழுவின் தலைவரான சட்ட நிபுணர் ஹெக்டர் ஜெயவர்த்தனா தமிழர் தரப்பு முன்வைத்த திம்புக்கோட்பாடுகளை முற்றாக நிராகரித்தார். நான்கு கோட்பாடுகளும் பிரிவினையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. இவற்றை ஏற்றால் நாடு பிரிந்துவிடும் என்று ஹெக்டர் ஜெயவர்த்தனா திம்பு பேச்சுவார்த்தை மேசையில் வாதிட்டார். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் அரசியல் தீர்வுக்கு திம்புக் கோட்பாடுகள் அத்திவாரமாக அமைய முடியாது என்பதே இலங்கை அரசாங்கத்தின் வாதமாக இருந்தது.

இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்பு 1985 இல் தமிழர் தரப்பு போராளிக் குழுக்கள் மற்றும் மதவாதக் குழுக்கள் இணைந்து நான்கு கோட்பாடுகளின் அடிப்படையிலேயே திம்புக்கோட்பாடு இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான, நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தியது.

1958 இல் பண்டா-செல்வா உடன்படிக்கை, 1965 இல் டட்லி-செல்வா உடன்படிக்கை, 1985 இல் திம்புக் கோட்பாடுகள் என்ற நீண்டு சென்று, யுத்தத்திற்கு அடிகோலியது. இந்திய அரசாங்கத்தின் தலையீடு காரணமாக 1987 இல் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறையை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணமாக இருந்த சமயத்தில் அங்கு தேர்தல் நடத்தப்படவில்லை. நீதிமன்றத்தினால் வடக்கு கிழக்கு மாகாணம் என்றும் கிழக்கு என்றும் பிரிக்கப்பட்டதன் பின்னர் தான் கிழக்கு மாகாணத்திற்கு இரு தடவைகள் தேர்தல் நடத்தப்பட்டது.

25 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக இப்போதுதான் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவிருக்கின்றது. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையின் கீழ் வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்தினால் அது நாட்டின் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்று பேரினவாத சக்திகள் வாதிடுகின்றன. அரசாங்கத்தில் இருக்கும் பேரினவாத சக்திகளும் வெளியில் இருக்கும் சக்திகளும் ஒரே குரலில் வாதிடுகின்றன.



தென்பகுதியில் உள்ள மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படும்போது அச்சக்திகள் மௌனமாக இருந்து வந்தன. அச்சபைகளை ஆளும் இனமாக பெரும்பான்மை இனமே வரும் என்று அச்சக்திகளுக்கு தெரிந்து இருந்தது. இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்ற எண்ண த்தில்தான் 13 ஆவது திருத்தத்தை இல்லாமற் செய்யவேண்டும் அல்லது இருக்கும் சொற்ப அதிகாரங்களையும் இல்லாமற் செய்து வெறும் எலும்புக்கூடாக மாற்றவேண்டும் என்ற நோக்குடன் பேரினவாத சக்திகள் செயல்படுகின்றன.

இப்பின்னணியில் தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தம்பியாரான அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அனுப்பிவைத்தார். 1985 இல் ஜெயவர்த்தனவும் தனது அரசாங்கத்தில் உள்ள வெளியுறவு அமைச்சரையோ அல்லது சிரேஷ்ட அமைச்சரையோ திம்பு மாநாட்டுக்கு அன்று அனுப்பவில்லை. அரசியல் அனுபவமற்ற ஆனால் சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்ற தனது தம்பி ஹெக்டர் ஜெயவர்த்தனாவை அரச தூதுக்குழுவின் தலைவராக அனுப்பிவைத்தார். நாட்டின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியின் பாதையிலே தனது தம்பியாரான அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அனுப்பிவைத்தார்.

13 ஆவது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்வோம் அல்லது இல்லாமற் செய்வோம் என்பதை தெரிவிப்பதே பஸில் ராஜபக்ஷவின் புதுடில்லி பயணத்தின் நோக்கமாகும். பஸில் ராஜபக்ஷ புதுடில்லிப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் ஜனாதிபதியின் மற்றொரு தம்பியாரான கோதாபய ராஜபக்ஷ 13 ஆவது திருத்தத்தை முற்றாக ஒழித்துக் கட்டவேண்டும் என்று பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார். இந்த நிலையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வந்துள்ளார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட செய்தியுடன் சிவ்சங்கர் மேனன் வந்துள்ளார் என்று தகவல். விசேட செய்தி என்னவாக இருக்கும்? இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா கொழும்பு அரசாங்கத்தின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொண்டு விழித்தெழுகின்றது என்று இந்திய அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் வி.சூரியநாராயணன் ஆய்வுக்கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

**அநாமிகன்**

Colour: Cyan Magenta Black





# புத்தகயா குண்டுவெடிப்பு

## கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?

எந்த மதமும் வன்முறையையோ அடக்குமுறையையோ ஆதரிக்கவில்லை! ஆனால் மதத்தின் பெயரால் தான் உலகில் அதிகமான வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றன. அதிகமான இரத்தம் சிந்தப்படுவதும் மதத்தின் பெயரால் நிகழும் வன்முறைகளால்தான்!

பௌத்தர்களின் புனித பூமியான புத்தகயாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகள் ஒட்டுமொத்த பௌத்த மக்களை வேதனையடையச் செய்திருக்கிறது.

இந்தியாவின் பீகார் மாநிலம் கயா மாவட்டத்தில் உள்ள புத்த கயாவில் தான் கௌதம புத்தர் ஞானம் பெற்றதாக நம்பப்படுகிறது. இங்குள்ள பழமை வாய்ந்த மகாபோதி கோவில் உலகின் புராதனச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் மக்காவிற்கு செல்வதுபோல் இந்துக்கள் காசிக்கு செல்வதுபோல் பௌத்தர்கள் புத்தகயாவிற்கு சென்று வழிபடுகின்றனர்.

இந்தப் புனித தலத்தில்தான் கடந்த ஞாயிறன்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

புத்தரின் கருணையால் 80 அடி உயர புத்தர் சிலைக்கும் மகாபோதிக்கும் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்றாலும் 9 தொடர்குண்டுகள் புத்தகயாவின் கட்டிடங்கள் சிலவற்றை பதம் பார்த்திருப்பதுடன் இரண்டு பௌத்த பிக்குகள் காயமடைந்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு பல உலகத் தலைவர்கள், பௌத்த குருமார் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

### ஏன் இந்தத் தாக்குதல்?

புத்த மதத்தைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் புனிதமாகக் கருதும் இடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நிச்சயமாக எவரும் நியாயப்படுத்த முடியாது. என்றாலும் எந்த வினைக்கும் எதிர்வினை உண்டு அல்லவா? பௌத்த குருமார் ஏனைய மதங்கள் மீது காட்டும் காழ்ப்புணர்வுதான் இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்பது பலரின் கருத்தாக இருக்கிறது.

மியான்மாரில் புத்த மதத்தினருக்கும் ரோகிங்கியா என்ற முஸ்லிம்களுக்கும் இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக மதக் கலவரம் நடந்து வருகிறது.

இந்த கலவரத்தில் இதுவரை 250 பேர் கொல்லப்பட்டதாகவும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்ததாகவும் ஐ.நா. கூறுகிறது. கயா தாக்குதல் இந்த மோதலின் எதிரொலி என்பது பலரின் கணிப்பாக இருக்கிறது.

### கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?

வன்முறைக்கு பதில் வன்முறை எனின் உலகில் அமைதி என்பது காணாத ஒன்றாகிவிடும். உலகில் பௌத்த வன்முறைகள் அதிகரித்து வருவதாக அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான ரைம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையிலும் கூட அண்மைக்காலமாக பௌத்த மதவாதம் தலைதூக்கி வருவதையே அவதானிக்க முடிகிறது.

மாடறுப்பதை தடை செய்ய வேண்டும், முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா ஆடையைத் தடை செய்ய வேண்டும் என பிறமத நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளும், இது பௌத்த பூமி என இலங்கையை நிறுவும் ஆக்கிரமிப்புகளும் குறைவின்றி தொடர்கின்றன. அமைதியே உருவாக காட்சி தரவேண்டிய பிக்குகளின் ஆக்கிரோஷப் போராட்டங்களால் வீதிகள் அவ்வப்போது அதகளமாகின்றன.

இப்போது புத்தர் ஞானம் பெற்ற கயாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு இந்த பௌத்தர்களுக்கு ஒரு ஞானத்தை நிச்சயம் ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

தங்களுடைய மதவாத போராட்டங்கள் பிற மதத்தவர்களை எந்த அளவுக்கு காயப்படுத்தியிருக்கும் என்பதை இவர்கள் உணர்வதற்கான தருணமிதுதான்.

### ஜனாதிபதி முனைவாரா?

குண்டுத் தாக்குதலில் புத்தகயாவின் போதிக்கும், புனித புத்தரின் சிலைக்கும் எதுவும் நடக்கவில்லை என்பது ஆறுதலான விடயம்.

ஆனால் இலங்கையில் தற்போது பல இந்து ஆலயங்கள் இருந்த இடம் தெரியாமல் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக அண்மையில் கொள்ளுப்பிட்டி பூமாரியம்மன் ஆலயம் இடித்து அகற்றப்பட்ட போது இந்துக்களின் மனம் எப்படி பதைபதைத்திருக்கும் என்பதை இந்தத் தருணத்தில் பௌத்தர்களால் நிச்சயம் உணரமுடிந்திருக்கும்.

விரைவில் நவகம்புர விநாயகர் கோவிலும் ஆமர்வீதிபெரடைல்பார்க் காளி கோவிலும் அந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தும் அறிவிப்புகள் இந்துக்களை கிலேசப்படுத்தியிருக்கிறது.

ஆலயம் என்பது வெறும் கட்டிடமோ சிலைகளோ கோபுரங்களோ அல்ல. அதையும் மீறி அங்கே ஒரு சக்தி, புனிதம் இருக்கிறது. புத்தகயா மீதான தாக்குதல் தொடர்பில் கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஆலயம் அகற்றும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது மிக நியாயமாக இருக்கும்.

தன்னுடைய மதத்தை உண்மையாக நேசிக்கும் ஒருவனால் பிற மதத்தை நிச்சயம் காயப்படுத்த முடியாது. களங்கப்படுத்தவும் முடியாது. ஒவ்வொரு மதத்தினரும் பிறமதங்களை காயப்படுத்தாமல் களங்கப்படுத்தாமல் இருந்தாலே போதும் உலகின் பல போராட்டங்கள் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிடும்.

-ரிவுதி




படப்பிடிப்பு : தர்ஷன மனமேந்திர

# கவிதைகள்

## கடவுளிடம் சில கேள்விகள்

ஆதியும் அந்தமுமில்லாத
அரும் பெரும் சோதியே -நீ
இருக்கின்றாய் என்றால் அந்த
இடருக்குள் எங்கு போனாய்?
கல்லாயிருந்த உன்னிடம்
எத்தனை மொழிகளில்
பேசினோம்
எடுத்தொரு வார்த்தை
இயம்பினாயோ இறைவா நீ?
கோயில் கட்டியுனை
கோபுரம் எழுப்பியுனை
கொண்டாடிய எம்மீது
குண்டடி படும்போது
கடவுளே நீ எந்தக்
கருவறையில்
ஒளிந்துகொண்டாய்
அண்டாக்கணக்கில்
அவித்துப் போட்டோமே
இறுதி நேரம் அங்கு
ஒரு பிடி போடவுனக்கு
இயலாமல் போனதுமேன்?
ஆயிரமாயிரம் மலர்களெடுத்து
ஆறுகாலப் பூசை செய்தோமே..
இரத்த ஆற்றில் நாம்
வெற்றுடலாய்க் கிடந்தவேளை
ஒரு தடவையாவது
கண் திறந்தாயோ?
வண்ண வண்ணப்
பட்டுடுத்தி உன்
வடிவை இரசித்த எங்கள்
உயிர் போகும் இறுதிவேளை
அரையிலோர் உடை தந்தாயோ?
தேர் கட்டியுனை
அழகு பார்த்த
எமக்கு நீ
பாடைதான் கட்டவேண்டாம்
படுக்கவோர் இடங்காட்டினாயோ?
புனிதமாய்...
நீயிருக்க வேண்டுமென்று
வாசனைப் புகை
காட்டிய எம்மை
குண்டுப் புகை கொண்டழித்தது
கொடுமையல்லவா?
மணி ஒலி
சங்கொலியுடன்
மேளக் கச்சேரி தந்துவிட்டு
வேட்டொலி நாம்
கேட்டோமா உன்னிடம்?
பஞ்ச புராணங்கள்
பாடிய உன்
பிஞ்சுகள்....
பிஞ்சு பட்டு நீயெங்கே
படுத்திருந்தாயோ?
மரணத்தின் பின்
எம்மை...
விசாரணை செய்
ஆனால்
கருக் கொண்ட சிசுவும்
பகுத்தறிவில்லா உசிரும்
என்ன பாவம் செய்ததய்யா?
அவைகூட என்ன பாவம்
செய்ததய்யா?

வே.முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.



## ஹைக்கூ...

பிடித்து விளையாட
கரம் நீட்டினாள்
என் குழந்தை!

மேகத்துக்குள்
மறைந்து கொண்டது
வான் நிலவு!

இருக்கும் உணவை
உட்கொள்ள
''கை'' அலம்பினேன்;
''அம்மா தாயே பசி''
வாசலில்
பிச்சைக்காரன்,!

பாய் விரித்தேன்
நான் படுக்க;
முந்திக் கொண்டது
என் செல்ல
நாய்க்குட்டி!

முடிந்த வரை
தடுத்துப் பார்த்தேன்
நிறுத்த முடியவில்லை;
கரை முட்டும்
கடல் அலை

கற்பிட்டி வஹாப்,
குயில்வத்தை.

## எப்படி மறப்பது?

உன்னுடன் பழகிய
அந்த பசுமையான
நாட்களையா?
உனக்கென என்
இதயத்தில் ஓர் இடம்
ஒதுக்கி வைத்தாயா?

உன்னால் உன் சுவாசத்தால்.!
உடலுக்கு உயிர் கொடுத்து
உயிர் வாழும் நான்
எப்படி மறப்பது?
உன் நினைவுகளை....!

சோ.ஜீவித்தா, கிரிமெட்டிய
நானுஓயா.

## என் காதல்

பொன் முகத்தை எண்ணி
பொங்கிய அன்பை
பொத்தி வைத்துள்ளேன்
பொக்கிஷமாய்
சொல்ல முடியாமல்
சொக்கி நிற்கின்றேன்
உனைக் காணும்
நொடிகளில்

லா. அன்பு,

## நம்பிக்கை

கனவுகளை நம்பவில்லை
கலைந்துவிடும் என்று
உறவுகளை நம்பவில்லை
பிரிந்து விடும் என்று
காதலை நம்பவில்லை
நிலைக்காது என்று ஆனால்
உன்னை நம்புகிறேன் நம்
நட்பு என்றும் நிலைக்கும் என்று

சி.பிரகாஷ்,
ஹொப்டன்.

## தனிமை

தனிமை என்ற துணைக்கு
கவலை என்ற
நண்பனா துணை!
புலம்புகிறேன் நிமிடம்
அற்ற வார்த்தைகளாக!
எனது புலம்பல்
காற்றோடு, சங்கமமாய்
பறவைகளின் செவிகளுக்கு
கிட்டியதால் என்னை
அவையும் கூட கேலிப்
புன்னகைத்து செல்கிறது
வேதனையின்
வெளி விளிம்பில்
எனது ஆட்டங்கள்
சொல்வதற்கு வார்த்தைகள்
இன்றியும்
நண்பர்கள் இன்றியும்
தனி மரமாய்
தனித்துவிட்டேன்!

எம்.யூ. அல்சாத்,
ஓட்டமாவடி.

## கடல் அலை

கடல் அலையின் ஓசை
காதுகளைப் பறிக்க
கடல் அலையினை
சுழற்றிவரும் காற்று
தீப்பிளம்பு போல்
கொந்தளித்து எழும்ப
காற்றினால் சுழல் நெருப்பும்
புழுதிகள் எம்
கன்னங்களை
குறிபார்த்துச் சென்றன,
ஐயோ! ஐயோ! என
எங்கும் அழுகுரல் கேட்க எங்கும்
மக்கள் கூட்டம் கடலை நோக்கி
கூப்பாடு போட
மீள்பிடிக்கச் சென்றவர்களை
அலைகள் காவிவர
அவர்களை காவிச்
சென்றனர் உறவினர்

யே.கரிப்பிரதாஷ்,
எழுவைதீவு



## தலைவா?

துப்பாக்கியில்
தூள் கிளப்பி விட்டாய்!
சுற்றி நின்றோரை
சிதறடித்து விட்டாய்!
தோட்டா தெறிக்கும்
உன் குரலில்
தென்றலை அழைத்து
கூகுளை
அறிமுகம் செய்தாய்!
உன்னை எண்ணி
ஒரு கூட்டம்
வெம்பிக் கொண்டிருக்கும்
வேளை
தன்னம்பிக்கை
தருவதற்கு
தயாராகி விட்டாய்
தலைவா!
உன் வருகை
என்ன மிக தொலைவா?

ரோஹித் விஜய்,
பொகவந்தலாவ.

உதய சூரியன் ''கவிதைச்சாலை''
சூரியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, ஸ்வீதமவுண்ட் வீதி, கொழும்பு 15.
பெயர்:
முகவரி:
தொலைபேசி இல:

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...!





இந்த வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தபோது திவ்யா நீதிமன்றில் ஆஜரானார். நீதிபதிகள் முன்பு சென்ற திவ்யா கண்ணீர் விட்டு கதறி அழுதார். என் அப்பாவும் இறந்துவிட்டார். அம்மா தனியாக இருக்கிறார். நான் மிகுந்த மனக்குழப்பத்தில் இருக்கிறேன். என் அம்மாவுடன் செல்லவே ஆசைப்படுகிறேன். இளவரசன் பற்றி எதுவும் கூற விரும்பவில்லை என்றார்.

காதல் மனைவியின் இந்த முடிவு இளவரசனை பேரிடியாய் தாக்கியது.

ஜூலை முதலாம் திகதி!

திவ்யா - இளவசரன் திருமணத்திற்கு தீர்ப்பு வழங்கும் நாள்!



நீதிமன்றில் ஆஜரான திவ்யா இளவரசனை திரும்பியும் பார்க்கவில்லை. இளவசரன் மீது எந்தக் குறையும் இல்லை. என்றாலும் இளவசரனுடன் இனி வாழ விரும்பவில்லை. தந்தையின் தற்கொலை, அதைத்தெடர்ந்து வந்த வன்முறைகளை என்னால் மறக்கமுடியவில்லை. எனது மனநிலையில் இளவசரனுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. எனவே தாயுடனேயே வாழ்நாள் முழுவதும் இருக்க விரும்புகிறேன். என் தந்தையின் இழப்பை முடிந்தவரை ஈடு செய்வேன் என இளவசரனின் காதலுக்கு சாவு மணியடித்தார்.

காதல் திருமணம் முதல் சந்தித்த எல்லாப் பிரச்சினைகளையும் அசராமல் சந்தித்த திவ்யாவின் இந்த வாக்கு மூலத்தால் நிலைகுலைந்து போனார்.

இந்நிலையில் இளவரசன் கடந்த வியாழக்கிழமை மர்மமான முறையில் இறந்து கிடந்தார். தர்மபுரி அரசு கலைக் கல்லூரி பின்புறம் ரயில் தண்டவாளம் அருகே இளவரசன் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலத்துக்கு அருகே அவரது மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்து. அங்கு மதுபாட்டில்கள், பை, பாதி தின்ற வாழைப்பழம் போன்றவை கிடந்தன.

இளவரசன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும் மர்ம நபர்கள் அவரைக் கொலை செய்து, உடலை தர்மபுரியில் ரயில் தண்டவாளம் அருகே போட்டுச் சென்றதாகவும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன.

இந்தக் காதல் ஜோடியின் முடிவு தமிழகத்தையே சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இந்நிலையில் இளவரசன் இறுதியாக திவ்யாவிற்கு எழுதிய உருக்கமான கடிதம் தற்போது வெளியாகியிருக்கிறது. இளவரசன் திவ்யாவை எந்த அளவுக்கு காதலித்தார் என்பதற்கு அந்தக் கடிதம் ஒரு சான்று.

அந்தக் கடிதத்தைப் பார்த்து திவ்யா கண்ணீர் விட்டு கதறி அழுதிருக்கிறார். காதலுக்கு எதிர்ப்பு கிளம்பியபோது இருவரும் கைகோர்த்து நின்றனர். தற்போது இளவரசனின் மரணத்தால் திவ்யா மட்டும் தனிமையில் இருக்கிறார்.

தன் காதலால் ஏற்பட்ட தந்தையின் மரணம், கிராமங்களில் வெடித்துக் கிளம்பிய வன்முறைகள் மட்டுமல்லாது, தன்காதல் காதலையே காவு கொண்ட சோகத்தையும் சுமந்தபடி இருக்கிறார் திவ்யா!

சாதி வெறி ஏற்படுத்திய விளைவால் கனவுகளைத் தொலைத்து இறந்துபோன இளவரசனும் மிகக் கொடுமையான உளச்சிக்கலுக்கு ஆட்பட்டிருக்கும் திவ்யாவும் நமது மனச்சாட்சியை உலுக்கியபடி நமக்கு முன்னே எப்போதும் நின்று கொண்டே இருப்பார்கள்.

-ரிஷிகா

## என் அன்புக்காதலி திவ்யாவுக்கு....

தருமபுரி இளவரசனின் உருக்கமான கடிதம்.

நீ என்னுடன் இருந்த நாட்கள் என் வாழ்நாளில் மறக்கமுடியாது. நீ என்னை விட்டுப் பிரிந்த நாளில் இருந்து என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. காரணம், எனக்கு உன்னை மிகவும் பிடிக்கும்.

ஜூலை 1 ஆம் திகதிவரை நீ வருவாய், என்னுடன் மீண்டும் சேர்ந்து வாழ்வாய் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன். ஒருவேளை நீ அன்று என்னுடன் வரவில்லை என்றால் கண்டிப்பாக நான் இந்த உலகத்தில் இருக்க மாட்டேன்.

நீ ஏற்கனவே உன் அப்பா இறந்ததற்கு காரணம் நீ தான் என்று நினைத்து கஷ்டப்படுகிறாய். நீ அடிக்கடி என்னிடம் சொல்வாய் "என் அப்பா உண்மையாகவே என் மீது பாசம் வைத்தவராய் இருந்தால் என்மேல் கொலைப்பழியை போட்டுவிட்டு என் வாழ்க்கையை இப்படி செய்திருக்க மாட்டார்" என்று சொல்வாய்.

அதுபோலவே நீ என்னிடம் கேட்பாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மையாகவே என்னால் உன்னை விட்டு வாழமுடியவில்லை. ஏன் எனில் அந்த அளவிற்கு நாம் இரண்டு பேரும் இருந்தோம். எனக்கு உன்ன ரொம்ப பிடிக்கும் திவ்யா. எனக்கு உன்ன ரொம்ப பிடிக்கும்.

நான் உனக்கு என்ன துரோகம் செஞ்சேன்? என்கூட ஏன் வாழ வரமாட்டேங்கறன்னு கண்டிப்பா எனக்குத் தெரியல ......

...நம்ம இரண்டுபேரும் எவ்வளவு கஷ்டத்துக்கும் மேல ஒன்னு சேர்ந்தோம்னு உனக்கு நல்லா தெரியும்.

எனக்கு ரொம்ப ஆசை திவ்யா. நம்ம இரண்டு பேரும் நல்லா வாழனும். நம்மள கேவலமாப் பாத்தவங்க முன்னாடி பொறாமைப்படும் அளவுக்கு உன்ன அழகா, கண்கலங்காம வச்சுக்கனும்னு எனக்கு ரொம்ப ஆசை.

உனக்கு ஒன்னு தெரியுமா... நீ என்னோட எல்லா விசயத்துலையும் சேர்ந்திருக்க. ஆனா இப்போ எதிலும் எங்கூட இல்ல. ரொம்ப கஷ்டமா இருக்குடா.

Please திவ்யா என்ன வெறுக்காத எனக்கு உன்னை ரொம்ப பிடிக்கும்.

தயவு செய்து என்னை மன்னித்துவிடு. நீ என்னிடம் கேட்கலாம், உண்மையாகவே நீ என் மேல் பாசம் வைத்தவனாக இருந்தால் ஏன் நீ என்னை விட்டு போகனும்னு....

..கண்டிப்பா சொல்றேன். நான் உன்ன விட்டுப் போகனும்னு நெனக்கல. எனக்கு உன்னோட சேர்ந்து வாழனும்னு ரொம்ப ஆசை. ஆனால், என்னால உன்னை பிரிந்து வாழ முடியல திவ்யா. என்னை மன்னிச்சுடு. நான் இந்த உலகத்தை விட்டுப் போறேன்.

இன்னொரு ஜென்மம் இருந்தா நீயும் நானும் ஒரே சாதியில பொறந்து பெத்தவங்க சம்மதத்தோடு கல்யாணம் பண்ணிக்கனும்னு எனக்கு ஆசையா இருக்குடா திவ்யா. I Love so much baby....I love so much....

### என் பாசத்திற்குரிய அப்பாவிற்கு....

என்னை மன்னிச்சுடுங்க. அப்பா அம்மாவையும், பாலாஜி, அக்கா எல்லோரையும் பாத்துகோங்க. தயவு செஞ்சி அம்மாவை கஷ்டப்படுத்தாதீங்கப்பா.

என் நேசமிகு அம்மாவிற்கு அம்மா என்னை மன்னிச்சுடு. எனக்கு உன்னை நல்லா வெச்சி பார்க்கனும்னு ஆசை. நீயும் அப்பாவும் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீங்க என்னை வளர்த்து படிக்க வைக்க. ஆனால் என்னால உங்களுக்கு எதுவுமே செய்ய முடியல......

...அடுத்த ஜென்மம்னு ஒன்னு இருந்தா நீயும், அப்பாவும் எனக்கு குழந்தையா பிறக்கனும். இந்த ஜென்மத்துல பட்ட கடன்ன நான் உங்களுக்கு அடுத்த ஜென்மம் தீர்க்கனும்.

### என்னோட Best Friend என் அண்ணன் பாலாஜிக்கு....

என்னை மன்னிச்சிடு பாலா...

நீ எனக்கு எவ்வளவோ சொன்ன தப்பான முடிவு எடுக்காதன்னு. ஆனால் என்னால முடியல பாலா. I am really so sorry Bala..

என்னோட இறப்புக்கு யாரும் காரணமில்லை. இது என் சுயமான முடிவாகும். என்னுடைய கடைசி ஆசை, நான் இறந்த பின்பு என்னைப் பார்க்க திவ்யா வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படி ஒருவேளை திவ்யா வந்தால் யாரும் அவளைத் திட்ட வேண்டாம். அவளை அனுமதிக்க வேண்டும்.

Please, அவளை யாரும் கோபமாகப் பேசவேண்டாம். திவ்யா ரொம்ப நல்ல பொண்ணு. எனக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். என்னால அவ கஷ்டப்படறது எனக்கு பிடிக்கல. அவளாவது. வாழ்க்கைல சந்தோசமா இருக்கட்டும்.

I Love you so much da Baby Dhivya. ...//

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

**11.07.13 முதல்**

**17.07.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | ஒய்வு | ஆர்வம் | தடங்கல் | புகழ் | நிறைவு | மறதி | இலாபம் |
| ரிஷபம் | சாந்தம் | அசதி | நஷ்டம் | இன்பம் | மேன்மை | ஒய்வு | பிரீதி |
| மிதுனம் | உழைப்பு | பாராட்டு | வெற்றி | உதவி | ஆதாயம் | பாராட்டு | நலம் |
| கடகம் | உற்சாகம் | நட்பு | ஆர்வம் | பொறுமை | அசதி | சோதனை | வெற்றி |
| சிம்மம் | எதிர்ப்பு | வெற்றி | புகழ் | பாராட்டு | நற்செயல் | சாந்தம் | உயர்வு |
| கன்னி | இலாபம் | நிம்மதி | சுபம் | ஏமாற்றம் | உயர்வு | குழப்பம் | ஆர்வம் |
| துலாம் | ஜெயம் | சோதனை | தோல்வி | வெற்றி | வரவு | ஊக்கம் | களிப்பு |
| விருச்சிகம் | செலவு | ஆக்கம் | பயம் | சோதனை | ஆக்கம் | ஜெயம் | சிக்கல் |
| தனுசு | தனம் | நலம் | இலாபம் | அலைச்சல் | அனுகூலம் | நலம் | பகை |
| மகரம் | பரிவு | சிந்தனை | களிப்பு | மேன்மை | நட்பு | பொறுமை | சிந்தனை |
| கும்பம் | சுகம் | பரிசு | வரவு | சுபம் | நஷ்டம் | பணயம் | மேன்மை |
| மீனம் | அனுகூலம் | அச்சம் | காரியசித்தி | நன்மை | ஜெயம் | நன்மை | ஒய்வு |

## சுயதொழில்வாய்ப்பு பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை

இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சு, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன ஒன்றிணைந்து பசறை பிரதேச செயலக வளாகத்தினுள் நடத்திவரும் சுயதொழிற் பயிற்சி நிலையத்தின் மூலமாக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் புதிய தொழில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மரவேலை தொழில்நுட்பம் (தமிழ் மொழி மூலம்), மின்னியல் பயிற்சிநெறி, பெண்களுக்கான தையல் பயிற்சி போன்றவற்றிற்காக புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக பயிற்சி நிலையத்தின் போதனாசிரியர் ஏ.சந்திரசேகர் தெரிவிக்கின்றார். இப்பயிற்சி நெறிகள் முழுநேர பயிற்சிகளாக இடம்பெறவுள்ளன.

மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை முதல் 15 ஆம் திகதி வரை மேற்குறித்த நிலையத்தில் இடம்பெறவுள்ளன. தரம் 9 ஐப் பூர்த்தி செய்து பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகியவர்கள் தொடக்கம் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் வரை கல்வி கற்றுவிட்டு தொழிலை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் வரை இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள முடியும். நேர்முகப் பரீட்சைக்கு வருபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வருமாறும் மேலதிக விபரங்களை அறிய 071-0318792 அல்லது 071-6785760 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் போதனாசிரியர் (இ.தொ.ப.அ.ச) ஏ.சந்திரசேகர் கேட்டுள்ளார்.

ஹாலிஎல நிருபர்

## பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவியினை பெற்றுக்கொள்ள எமது மலையக இளைஞர்கள் விண்ணப்பிக்க வேண்டுமென ஊவா மாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளருமாகிய அ.அரவிந்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு 1817 ஆம் இலக்கம் கொண்ட 28.06.2013 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளிவந்த அரச வர்த்தமானி ஊடாக கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவிற்கும் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பிக்கும் திகதி முடிவுற்ற நிலையில் தற்போது பொலிஸ் திணைக்களத்தின் சாதாரண பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கீழ் கண்ட தகைமைகளை கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

✱க.பொ.த சாதாரணதர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

✱இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குல உயரமும், மூச்சுவிட்ட நிலையில் மார்பு 30 அங்குலமும் (ஆகக் குறைந்தது) இருத்தல் வேண்டும்.

✱30.08.2013 ஆம் திகதியன்று 18 தொடக்கம் 28 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவங்களை பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலங்கை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் கொஸ்தாபல் பதவி எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 30.08.2013 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தகுதி வாய்ந்த சகல மலையக இளைஞர்களும் விண்ணப்பிக்க ஏதுவாக விண்ணப்பப்படிவங்கள் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையகத் தொழிலாளர் முன்னணியின் அட்டன் தலைமைக் காரியாலயம் உள்ளிட்ட அனைத்து பிராந்திய, மாவட்ட காரியாலயங்களிலும் மலையக மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்கள் ஆகியோரிடத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை இது தொடர்பான மேலதிக தகவல்களை எமது அனைத்து காரியாலயங்கள் மற்றும் பிரதேச அமைப்பாளர்களிடமிருந்தும், 051- 4920300, 051-4920302, 051-2222793, 052-2223052, 055-2229838, 055-4928206, 077-3516116, 0777-727472 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாகவும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

மலையக விண்ணப்பதாரிகள் அதிகளவில் அரச துறையில் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற சிந்தனையோடே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




நண்பர் 1: என் வீட்டுல இன்னிக்கி அடுப்பு எரியுதுன்னா, அதுக்கு இவருதான் காரணம்......
நண்பர் 2: இவரு, அவ்ளோ பெரிய கொடை வள்ளலா??
நண்பர் 1: அதெல்லாம் இல்லப்பா, இவரு நம்ம ஏரியாவுல கேஸ் ஏஜென்சி வச்சு இருக்காரு...



மனைவியிடமும் காதலியிடமும் மறைக்க வேண்டியவை எவை?

மனைவியிடம் காதலியையும், காதலியிடம் மனைவியையும் மறைக்க வேண்டும்.!



''ஆயிரம் பொய்யை சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம்னு சொல்லியிருக்காங்க ... ஆனா நான் ஒரே ஒரு பொய் சொல்லி கல்யாணம் பண்ணினதுக்கு எல்லோரும் என்னை அடிக்க வர்றாங்க''
''அப்படி என்ன பொய் சொன்னீங்க?''
''இன்னும் கல்யாணம் ஆகலைன்னு''

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

## பிரச்சினை

குருவும் சீடர்களும் காட்டு வழியே பயணம் செய்தனர்.

அப்போது குரு தன் சீடர் ஒருவரிடம் அதோ அந்த செடியை பிடுங்கு என்றார். சீடர் உடனே பிடுங்கி எறிந்தார்.

சிறிது தொலைவு சென்றதும், முன்பை விட சற்று பெரிய செடியை காட்டி அதைப்பிடுங்கு என்றார் குரு.

மற்றொரு சீடர் வெடுக்கென பிடுங்கி எறிந்தார்.

கொஞ்ச தூரம் குருவும் சீடர்களும் நடந்தனர். இப்போது குரு ஒரு சிறிய மரம் அளவுக்கு வளர்ந்த செடியைக் காட்டி பிடுங்கு என்றார்.

முதலாமவர் முயன்றார் முடியவில்லை. மற்றொரு சீடர் முயன்றார், முடியவில்லை, இப்படியே எல்லா சீடர்களும் முயன்றும் முடியவில்லை.

எங்களால் முடியவில்லை என்றனர்.

குரு சொன்னார்- பிரச்சினைகளும் இந்தச் செடியை போல தான் என்று.

புரியாத சீடர் ஒருவர் , அது எப்படி செடியும் பிரச்சினையும் ஒன்றாகும் குரு என்றார்.


சிரித்தபடியே, சிறிய செடியை உங்களால் பிடுங்க முடிந்தது. ஆனால் சற்றே பெரியதான செடியை பிடுங்க முடியவில்லை. அதுபோல பிரச்சினைகள் சிறியதாக இருக்கும்போது தீர்த்துவிடலாம், வளரவிட்டால் ஒன்றுமே செய்யமுடியாது என்றார்.














ஒரு பேப்பர் ரெண்டு நிமிசம் எரிஞ்சா சாம்பல் ஆகும். ஒரு கட்டை பத்து நிமிசம் எரிஞ்சா சாம்பல் ஆகும். ஒரு மரம் ரெண்டு மணிநேரம் எரிஞ்சா சாம்பல் ஆகும். ஆனா ஒரு பல்பு எவ்வளோ நேரம் எரிஞ்சாலும் சாம்பல் ஆகாது. இதான் அறிவியல்




# பேசத்தெரிந்து கொள்ளுங்கள்.

உரையாடல் ஒரு கலை. இனிமையாகவும் சுவையாகவும் பிறரைக் கவரும் வண்ணம் உரையாடுவது ஒரு வித்தை.

அந்தக் கலை கைவர சிலவழிகள்:

✱ உரையாடலின்போது உங்களைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்காதீர்கள். உங்கள் உடல்நிலை, உங்கள் பிரச்சினைகள், தொந்தரவுகள் இவை பற்றிப் பேசாதீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. கேட்பவர்களுக்கும் போர்.

✱ நீங்களே பேச்சைக் குத்தகை எடுக்காதீர்கள். நீங்கள் நகைச் சுவையாகப் பேசுபவராக இருக்கலாம். ஆனால் உங்கள் பேச்சைக் கேட்டு முதலில் விழுந்து விழுந்து சிரிப்பவர்கள் கூட கொஞ்ச நேரத்தில் சலிப்படைவார்கள். நாம் பேசக் கொஞ்சம் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறாரே என்று எரிச்சல் படுவார்கள். எனவே மற்றவர்களும் பேசுவதற்கு வச தியாக இடைவெளி கொடுங்கள்.

✱ குறுக்கே விழுந்து மறுக்காதீர்கள். நீங்கள் சொல்வது தப்பு, என்று சொல்லும்போதே உரையாடல் செத்துவிடுகிறது. அதைக் காட்டிலும் பேசுபவரின் பேச்சில் உங்களுக்கு உடன்பாடு இருந்தால் அதை உறுதிப்படுத்துங்கள்.


✱ திடீரென்று ஒரு விடயத்திலிருந்து இன்னொரு விடயத்திற்குத் தாவாதீர்கள். அடுத்தவர் பேசும்போது அரை வினாடி நிறுத் தினால் உடனே நுழைந்து வேறு விடயத்தைப் பேச ஆரம்பிக்கக்கூடாது.

✱ எதிராளியின் பேச்சில் உண்மையான அக்கறை காட்டுங்கள். அவர் உள்ளம் திறந்து பேச அது வழி வகுக்கும். அவர் பேசும் விஷயத்தை விரிவுபடுத்துங்கள். உரையாடல் இனிமையாய் அமையும்.

✱ ஒரு விடயத்தைப் பற்றி ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பேச்சு வேறெங்கோ சென்றுவிட்டால் நீங்கள் அதை மறவாது விட்டுப்போன விடயத்தை ஞாபகப்படுத்துங்கள். இது பண்பாடு மட்டும் அல்ல. அவருடைய பேச்சில் உண்மையான அக்கறை காட்டுவதாக அமையும்.

✱ எதையும் அடித்துப் பேசி முத்தாய்ப்பு வைக்காதீர்கள். எதிராளிக்கு வேறு கருத்தும் இருக்கக் கூடும் என்பதற்கு இடம் கொடுத்துப் பேசுங் கள்.

✱ தாக்காதீர்கள். கெட்ட விடயத்தைக் குறை சொல்லும்போது கூட குத்தலாகவோ அவதூறாகவோ பேசாதீர்கள். கிண்டலாகப் பேசுவது உங்கள் மூளைக் கூர்மையைக் காட்டக் கூடும். ஆனால் எதிராளிக்கு இருப்புக் கொள்ளாமல் போகும் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.



# அம்மா நீ எங்கே?

ஆவி..! இரண்டெழுத்துச் சொல்தான்! இந்த இரண்டெழுத்துச் சொல் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் தரும் அனுபவங்கள் ஆயிரம். ஒவ்வொரு அனுபவமும் ஒவ்வொரு மாதிரி. சிலருக்கு வாழ்க்கையில் அது மறக்க முடியாத திகிலை ஏற்படுத்தி விடும். சிலருக்கு வாழ்க்கையின் போக்கையே மாற்றி விடும். சிலருக்கோ அது தீராத சோகத்தையும் வேதனையையும் ஏற்படுத்திவிடும்.

எனது அனுபவமோ இதில் மிக வித்தியாசமானது.

ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையிலும் மறக்கமுடியாத உறவு தாய்! அந்தத்தாய் காட்டும் அன்பும் அக்கறையும் அந்த அன்பு தரும் மன அமைதியையும் உலகில் வேறு எந்த உறவாலும் தந்துவிட முடியாது.

இரண்டு ஆண், இரண்டு பெண் என நான்கு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய என் தாய்க்கு அந்திம காலத்தில் பணிவிடை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

சுமார் 3 ஆண்டுகளாக அம்மா பாரிசவாத நோயால் படுக்கையில் கிடந்து விட்டாள். வீட்டில் நான் மட்டுமே திருமணமாகாதவன். ஒரு வேலைக்காரியை அமர்த்திக் கொண்டு அம்மாவின் முழு வேலையையும் எனது கண்காணிப்பின் கீழேயே வைத்துக் கொண்டேன். அம்மாவுக்கு நோய்தரும் வேதனையை என்னால் குறைக்க இயலாவிட்டாலும் மனவேதனை இன்றி பார்த்துக் கொண்டேன். இப்படி பார்த்துப் பார்த்து பாசத்தை வாரிக் கொடுக்கும் மகன் கிடைக்க கொடுத்து வைத்தவள் என அம்மாவைப் பார்த்து பலர் பொறாமைப்பட்டார்கள். ஆனால், எத்தனை பேருக்கு இந்த பாக்கியம் கிடைக்கும்? பாசம் மிகுந்த அம்மாவுக்கு பணிவிடை செய்யக்கிடைத்த நான்தான் கொடுத்து வைத்தவன் என நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

ஆனால் அந்தப் பாக்கியமும் பறிபோகும் காலம் வந்தது. அம்மா அதிக நோய் வாய்ப்பட்டார். கொழும்பிலுள்ள பிரபல மருத்துவமனையில் அனுமதித்தேன். இரண்டு நாட்கள் அம்மாவை கூடவே இருந்து கவனித்துக் கொண்டேன். ஆனால் காலன் தான் கருணையில்லாதவன் ஆயிற்றே! அம்மாவின் உடல்நிலை மோசமடைந்தது. வயதுதானே! இனி உயிரை இழுத்துப்பிடித்து வைத்து என்ன செய்வது என வைத்தியர்களும் கைவிட்டுவிட கலங்கிப்போனேன்.

மூச்சுப் பேச்சு எதுவுமில்லை அம்மாவுக்கு மார்புகூடு மட்டும் லேசாக ஏறியிறங்கி உயிர் இருப்பதை உறுதி செய்தது. எனக்கு அம்மாவின் இறுதி நிமிடங்களைப் பார்க்கும் தைரியம் இல்லை. இரவு 10 மணியளவில் நேராக வீடு வந்து சேர்ந்துவிட்டேன்.

தனிமை மிகக் கொடுமையாக இருந்தது. வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு இடமும் அம்மாவை ஞாபகப்படுத்தின. அம்மாவின் வாசனை வீட்டை நிறைத்திருந்தது.

மனது கனக்க கட்டிலில் விழுந்து கதறிக் கதறி கண்ணீர் தீரும் மட்டும் அழுதேன்.

எவ்வளவு நேரம் கடந்தது என தெரியவில்லை.

திடீரென எங்கிருந்தோ சில்லென குளிர்காற்று வீசியது.

யாரோ தலையை வருடியது போலிருந்தது.

அது...... அது... அம்மாவின் ஸ்பரிசம். விபரிக்க முடியாத சுகமாக இருந்தது. தம்பி... தம்பி... என அம்மா கனிஸ்வரத்தில் அழைக்கும் குரல்...!

தம்பி நான் போறேன்... நான் போறேன்... என்று குரல்

திடுக்கிட்டு கண்களைத் திறந்தேன். அழுது அழுது அப்படியே உறங்கிவிட்டது ஞாபகம் வந்தது.

சட்டென போர்வைச்சுருட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்தேன். அப்போது எங்கிருந்துதான் வந்ததோ ஒரு பேய்க்காற்று.

ஜன்னல் கதவுகள் படபடவென அடித்தன.

வீட்டின் கதவு ஜன்னல்களை பூட்டாமலேயே படுத்துவிட்டது ஞாபகம் வந்தது. வீட்டுக்குள் வந்து சுழன்றடித்த காற்றில் சுவரில் மாட்டியிருந்த அம்மா அப்பாவின் திருமணப் புகைப்படம் தடாலென கீழே விழுந்தது.

அம்மா...... என அலறிவிட்டேன்.

ஒரு கணம் தான் மறுகணம் காற்று எதுவுமில்லை.

நடந்தது கனவா? நனவா? என்று தெரியவில்லை.

அப்படியானால் இப்போது நான் கேட்ட குரல்...

கீழே விழுந்து கிடந்த புகைப்படத்தின் கண்ணாடிகள் சிதறிக் கிடந்தன.

கடிகாரத்தைப் பார்த்தேன் சரியாக மணி 3. அம்மா எப்படியிருக்கிறாரோ?

மீண்டும் அம்மாவின் ஞாபகம் மனதை அழுத்த கண்ணீர் பெருக்கெடுத்தது. விடியும் வரை காத்திருந்தேன்.

விடிந்ததும் முதல் வேளையாக வைத்தியசாலைக்குச் சென்றேன். அம்மாவின் அறைக்கதவு பூட்டியிருந்தது.

அம்மா இரவே இறந்துவிட்டார் என்றார்கள். அம்மா இறக்கும்போது எத்தனை மணி என்றேன்.

அதிகாலை 3 என்றாள் ஒரு தாதி.

அதிகாலை 3 மணியளவில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஞாபகத்திற்கு வந்தது. அப்படியானால் இரவு தலைகோதியது, போய் வருகிறேன் எனச் சொன்னது அம்மாவா...?

தூவல் தொகுப்பு - அபி
















# கலாட்டா
















போஸ்ல யாரும்மா?



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (08, ஹெவ்லொக் ரோட், கொழும்பு 15) 11.07.2013 வியாழன் 84, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது